

புதன்பொய்கை

யாழ்ப்பாணத்தில் காற்று மாசு

விரிவு பக்கம்:- 03

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 350

புதன்கிழமை
12 நவம்பர் 2025

ஐப்பசி 26 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

## மாவீரர்நாள் நினைவேந்தலை நடத்துவதில் யாழ். மாநகரசபையில் மீண்டும் இழுபறி

### முன்னணி, தமிழ் மக்கள் கூட்டணி சொற்போர்

யாழ்ப்பாணம், நவ. 12
யாழ்ப்பாணம் மாநகரசபையின் ஆளுகைக்கு உட்பட்ட நல்லூர் பின் வீதிப் பகுதியில், தியாகதீபம் திலீபனின் நினைவுத் தூபிக்கு அருகாக நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவது யார்? என்ற குழப்பம் யாழ்ப்பாணம் மாநகரசபையின் நேற்றைய அமர்விலும் 15



பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி

## யாழ்.மாநகர சிற்றூழியர்கள் நேற்றுப் பணிப்புறக்கணிப்பு!

யாழ்ப்பாணம், நவ. 12
பிராந்திய சுகாதார சேவை அதிகாரியின் கீழ் தம்மைச் செயற்பட அனுமதிக்குமாறு வலியுறுத்தி, யாழ்ப்பாணம் மாநகர சிற்றூழியர்கள் நேற்றுப் பணிப்புறக் 13

## சிற்றூழியர்களின் போராட்டத்தில் பல்வேறு பின்னணிகள் உள்ளன

### சந்திக்க மறுத்தார் யாழ்.மேயர்

யாழ்ப்பாணம், நவ. 12
யாழ்ப்பாணம் மாநகர சிற்றூழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்றுப் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் மேற்கொண்ட நிலையில், 15



## ஏழைகள் மீது மேலும் வதை!

### பட்ஜெட் மீது நாமல் விமர்சனம்

கொழும்பு, நவ. 12
ஏழைகளை மேலும் வதைக்கும் வகையிலும், அவர்களுக்கு வாழ்க்கைச் சுமையை அதிகரிக்கும் வகையிலும் ஜனாதிபதி 15

# மாவீரர் தினம் புனித நாள்!

### அறிவித்தது பச்சிலைப்பள்ளி பிரதேசசபை

### மதுபானசாலைகளை மூடவும் முடிவு

கிளிநொச்சி, நவம்பர் 12
மாவீரர்நாளை புனிதமான நாளாகத் தீர்மானம் நிறைவேற்றியதுடன், அன்றையதினம் மதுபானசாலைகளை மூடவும் பச்சிலைப் பள்ளி பிரதேசசபை முடிவெடுத்துள்ளது. 15

## ஒரு கிலோகிராம் பாதீனியம் 200 ரூபாவுக்குக் கொள்வனவு!

### கரைச்சி பிரதேசசபை நடவடிக்கை

கிளிநொச்சி, நவ. 12
பாதீனியத்தை ஒழிக்கும் வகையில், பொதுமக்களிடம் இருந்து பாதீனியத்தை கொள்வனவு செய்யும் திட்டத்தை கரைச்சிப் பிரதேசசபை 15

## ரயில் மோதி முதியவர் பலி

கிளிநொச்சி, நவ. 12
காங்கேசன்துறையில் இருந்து அநுராதபுரம் நோக்கிப் பயணித்த யாழ்ராணி ரயிலுடன் மோதுண்டு நேற்றுக் காலை முதியவர் ஒருவர் 15

## நான் நினைத்திருந்தால் ஆட்சியைப் பிடித்திருப்பேன்!

### சர்வாதிகார விமர்சனங்களுக்கு சரத் பொன்சேகா பதிலடி

கொழும்பு, நவ. 12
நான் நினைத்திருந்தால் இறுதிப் போரின் பின்னர் ஆட்சியைக் கைப்பற்றியிருக்க முடியும் என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித் 15

யாழ்ப்பாணத்தில் விரைவில்

## ரூ.170 மில்லியன் செலவில் உள்ளக விளையாட்டரங்கு

கொழும்பு, நவ. 12
யாழ்ப்பாணத்தில் 170 மில்லியன் ரூபா செலவில் உள்ளக விளையாட்டரங்கு ஒன்றை அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.
வடக்கு - கிழக்கு மாகாணங்களில் விளையாட்டுத்துறையை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு முதலீடுகளை தற்போதைய அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. இதன் தொடர்ச்சியாகவே, 170 மில்லியன் 15

## முன்னைய முறையில் மாகாணசபைத் தேர்தல்

### ஹர்ஷ டி சில்வா வலியுறுத்து



கொழும்பு, நவ. 12
மாகாணசபைத் தேர்தலை பழைய முறையின்கீழ் நடத்துவதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும் என்று ஐக்கிய 15



வருகைப் பதிவேட்டுக்கு எதிர்ப்பு

## தாதிய உத்தியோகத்தர்கள் இன்று பணிப்புறக்கணிப்பு!

யாழ்ப்பாணம், நவ. 12
வடக்கு மாகாணசபையின் ஆளுகைக்கு உட்பட்ட மருத்துவமனைகளில், இன்று காலை 7 மணி முதல் நாளை காலை 7 மணிவரை அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவதற்கு அரச 15

## தவறான முடிவெடுத்து இளைஞர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், நவ. 12
வடமராட்சி - பொலிகண்டிப் பகுதியில் 37 வயதுடைய ஆணொருவர் 15

தாய்மாமனின்

## கொடும் சித்திரவதையால் யுவதியொருவர் உயிரிழப்பு

### பெற்றோர் இருவரும் இல்லாதவர்

யாழ்ப்பாணம், நவ. 12
கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில், தாய்மாமனால் கொடும் தாக்குதல்களுக்குள்ளான யுவதியொருவர் திடீர் சுகவீனமுற்று உயிரிழந்துள் 15

முச்சந்தி முரளி

'ஆனா ஊனா எண்டா எல்லாரும் புறக்கணிப்பென்டால் சனம் என்ன தான் செய்யிறது?'

## தொல்பொருள்சார் குழுவில் சிறுபான்மையினருக்கு இடம்

### அமைச்சரவையில் முடிவு

விரிவு பக்கம்:- 15

மக்கள் ... தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி: 11.11.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 4252
ஆங்கில எழுத்து: Q
வெற்றி இலக்கங்கள்: 07 45 47 70
விசேட எழுத்து: Q

**ஹந்தஹனை ராசி சுப பலன்**
திகதி: 11.11.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 1319
வெற்றி இலக்கினம்: தனு
வெற்றி இலக்கங்கள்: 22 26 38 46

**NLB ஜய**
திகதி: 11.11.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 0278
ஆங்கில எழுத்து: P
வெற்றி இலக்கங்கள்: 7 5 3 8

**மெகா பவர்**
திகதி: 11.11.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 2358
ஆங்கில எழுத்து: Y
சுப்பர் இலக்கம்: 02
வெற்றி இலக்கங்கள்: 18 25 50 52

**மஹஜன சம்பத**
திகதி: 11.11.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 6010
ஆங்கில எழுத்து: Y
வெற்றி இலக்கங்கள்: 2 2 6 9 6 7

**தன நிதானய**
திகதி: 11.11.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 2040
ஆங்கில எழுத்து: G
வெற்றி இலக்கங்கள்: 23 44 49 56
விசேட எழுத்து: G

**சுப தவசக்**
திகதி: 11.11.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 0126
வெற்றி இலக்கினம்: தனு
வெற்றி இலக்கங்கள்: 24 37 53

# இனப்பிரச்சினையைத்தீர்க்க முன்வரவேண்டும் அரசாங்கம்

## ஸ்ரீநேசன் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, நவ.12

**இலங்கையில் புரையோடிப்போயுள்ள தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை காண்பதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்வரவேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் வலியுறுத்தியுள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வரவு -செலவுத் திட்டத்தின் 2ஆம் வாசிப்புமீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

வரவு - செலவுத் திட்டப் பற்றாக்குறையைக் குறைப்பதற்குரிய வழிவகைகள் பற்றிப் பேசப்பட்டது. நாட்டில் புரையோடிப்போயுள்ள தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதன்மூலம் இந்த நாடு நன்மையடையக்கூடிய சூழ்நிலை காணப்படுகின்றது. புலம்பெயர்ந்துள்ள எமது மக்கள் முதலீடுகளைச் செய்வதற்கு முன்வரக்கூடும். இதன்மூலம் அவர்களிடமிருந்து பொருளாதாரத்துக்குப் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

இறுதிப்போரில் நடந்த சம்பவங்கள் தொடர்பில் பொறுப்புக்கூறல் அவசியம் என ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்கான பரிகாரம் மற்றும் மீள்நிகழாமை என்பன பற்றியும் வலியுறுத்தப்பட்டுள்ளன. இவற்றில் இந்த ஆட்சியிலும் முன்னேற்றம் தென்படவில்லை. இது பற்றியும் கவனஞ்செலுத்தப்பட வேண்டும் - என்றார். (எ-44)

**சுபிரி தன சம்பத**
திகதி: 11.11.2025
தினம்: செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம்: 0718
ஆங்கில எழுத்து: X
வெற்றி இலக்கம்: 4 2 2 1 1 5

**Super Ball** DLB
திகதி: 11.11.2025
தினம்: செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு வாரம்: 2984
ஆங்கில எழுத்து: A
வெற்றி இலக்கம்: 08 20 67 80

**சனிதா** DLB
திகதி: 11.11.2025
தினம்: செவ்வாய்க்கிழமை
ஆங்கில எழுத்து: U
வெற்றி இலக்கம்: 13 41 68 69
வெற்றி வாரம்: 5145

**SASIRI** DLB
திகதி: 11.11.2025
தினம்: செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம்: 0814
வெற்றி இலக்கம்: 16 33 46

**லக்ன ராசி** DLB
திகதி: 11.11.2025
தினம்: செவ்வாய்க்கிழமை
கடகம்
வெற்றி இலக்கம்: 09 14 37 60
சீட்டிழுப்பு வாரம்: 4696

**KAPRUKA** DLB
திகதி: 11.11.2025
தினம்: செவ்வாய்க்கிழமை
ஆங்கில எழுத்து: T
சுப்பர் இலக்கம்: 30
வெற்றி இலக்கம்: 41 52 55 65
வெற்றி வாரம்: 2160

**அத கோடிபதி** DLB
திகதி: 11.11.2025
தினம்: செவ்வாய்க்கிழமை
ஆங்கில எழுத்து: M
வெற்றி இலக்கம்: 06 19 45 74
வெற்றி வாரம்: 2810

# பாப்பரசர் லியோ இலங்கை வர வாய்ப்பு

கொழும்பு, நவ.12

பாப்பரசர் லியோ இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளக்கூடும் என்று தெரியவருகின்றது. வத்திக்கான் உயர் தூதுவர் ஒருவரை மேற்கோள்காட்டி கத்தோலிக்கச் செய்தி நிறுவனம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கும், வத்திக்கானுக்கும் இடையிலான இராஜதந்திர உறவு ஆரம்பிக்கப்பட்டு இந்த வருடத்துடன் 50 ஆண்டுகள்நிறைவடைந்துள்ளது. அதையொட்டி வத்திக்கான வெளிவிவகார அமைச்சர் போல் ரிச்சர்ட் கல்லாகர், கடந்த 3ஆம் திகதி கொழும்புக்குப் பயணம் மேற்கொண்டார்.

**ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியபோது, அமைதி மற்றும் உறுதித்தன்மையை நோக்கிய, இலங்கையின் முன்னேற்றத்தை அங்கீகரிக்கும் வகையில், பாப்பரசர் லியோ இலங்கைக்கு வரக்கூடும்எனக்குறிப்பிட்டிருந்தார். மத மற்றும் இனக்குழுக்களிடையே அமைதி மற்றும் ஒற்றுமையை மேம்படுத்துவதில் இலங்கையின் முன்னேற்றத்தைப் பாப்பரசர் வரவேற்றுள்ளார். இந்தப் பின்புலத்திலேயே அவர் கொழும்புக்கு வரக்கூடும் எனத் தகவல் வெளியாகியுள்ளது. (எ-44)**

# நுகேகொட பேரணியால் ஐ.ம.சக்திக்குள் குழப்பம்

கொழும்பு, நவ.12

நுகேகொடவில் நடைபெறவுள்ள பேரணி தொடர்பில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்திக்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளது என்று உட்கட்சி தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள இந்தப் பேரணியில் பங்கேற்பதில்லை என ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானம் எடுத்துள்ளது. இதுதொடர்பில் ஏற்பாட்டாளர்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும் பேரணியில் பங்கேற்கவேண்டுமெனவும், கட்சி முடிவு மீள்பரிசீலனை செய்யப்படவேண்டும் எனவும் ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த விடயத்தில் ஐக்கிய மக்கள் சக்தி விட்டுக்கொடுப்புச் செய்தால், ஏனைய எதிரணிகள் தலைதூக்கக்கூடும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஜனநாயகத்துக்காகவும், நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டும் என்று வலியுறுத்தியும் இடம்பெறவுள்ள இந்தப் பேரணிக்குப் பிரதான எதிர்க்கட்சியே தலைமைத்துவம் வகிக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி சார்பு தொழிற்சங்க உறுப்பினர்கள் சிலரும் சுட்டிக்காட்டியுள்ளனர். (எ-44)



# சிறுபிள்ளைகளுக்கான கட்டுக்கதையாக 'பட்ஜெட்'

## கம்மன்பில தெரிவிப்பு

கொழும்பு, நவ.12


**சிறுகுழந்தைகளைத் தூங்கவைப்பதற்காகவே கட்டுக்கதைகள் சொல்லப்படுகின்றன. ஜனாதிபதியின் வரவு - செலவுத் திட்ட உரையைப் பார்க்கும்போது அது நிரூபணமாகின்றது. இந்தப் பாதீடு நடைமுறைக்குச் சாத்தியமற்ற ஒன்று என்று பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் சட்டத்தரணி உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியின் கடந்த கால, நிகழ்கால மற்றும் எதிர்காலக் கட்டுக்கதைகள் என்ற பெயரில் புத்தக அலுமாரியை ஒதுக்கவேண்டும். 2025ஆம் ஆண்டு வீதிகள், குளங்கள் மற்றும் கட்டடங்கள் அமைத்தல் போன்ற மூலதனச் செலவுகளுக்காக ரூபா 1,300 பில்லியன் ஒதுக்கப்பட்டது.

ஆனால், செப்ரெம்பர் 30ஆம் திகதி வரையில் அந்தத் தொகையில் 25% மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது.

அதிகபட்சம் வருட முடிவில் மூலதனச் செலவுகள் 50% வரை உயரலாம். அதற்கு மேல் செலவுசெய்யமுடியாது. கடந்த வரவு -செலவுத் திட்டத்தில் ஆரவாரத்துடன் முன்வைக்கப்பட்ட வரவு -செலவுத் திட்ட முன்மொழிவுகளில் 50% மட்டுமே நிறைவேற்றப்பட்டுள்ளது. அதில் சரிபாதி வெறும் பொய்யான வாக்குறுதிகள் மட்டுமே - என்றார். (ச-இ)



# உயர்தரப் பரீட்சைகள் மதிப்பீடு ஆரம்பம்

கொழும்பு, நவ.12

2025ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை நடைபெற்று வரும் நிலையில் இம்முறை உயர்தரப் பரீட்சை நடவடிக்கைகள் நிறைவடைவதற்கு முன்பே விடைத்தாள் திருத்தும் பணிகளை ஆரம்பிக்கவுள்ளதாக இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உயர்தரப் பரீட்சைகள் தொடர்பாக இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டபோதே பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இந்திகா குமாரி லியனகே இதனைத் தெரிவித்தார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 40 இலட்சம் போதைமாத்திரைகள் இந்த ஆண்டில் இதுவரை மீட்பு

**கொழும்பு, நவ.12**
**இலங்கையில் கடந்த ஜனவரி மாதம் முதல் இதுவரையில் 40 இலட்சத்துக்கும் மேற்பட்ட போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட விசேட ஊடக சந்திப்பிலேயே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
கடந்த ஜனவரி மாதம் முதல் இதுவரையில் ஆயிரத்து 493 கிலோ ஹெரோய்ன் போதைப்பொருளும், 15 ஆயிரத்து 500 கிலோ கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளன. 32 கிலோ கொக்ஹெய்ன் போதைப்பொருள், 604 ஹஸீஸ் போதைப்பொருள், 2 ஆயிரத்து 554 ஐஸ் போதைப்பொருள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன. தேசிய போதை ஒழிப்பு நடவடிக்கை ஆரம்பமான பின்னர் கடந்த இரு வாரங்களில் 13 ஆயிரத்து 490 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்- என்றார். (எ-44)

## இரட்டைக்கொலைச் சம்பவம்; அறுவருக்கு மரணதண்டனை

அம்பாறை,நவ.12
இரண்டு நபர்களைத் தாக்கி, பின்னர் அவர்களை வாகனத்தால் மோதிப் படுகொலை செய்தனர் என்ற குற்றச்சாட்டில், அறுவருக்கு அம்பாறை மேல் நீதிமன்றம் மரணதண்டனை விதித்துள்ளது.
2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி பதியத்தலாவைப் பகுதியில் இந்த இரட்டைக்கொலைச் சம்பவம் இடம்பெற்றது.
அன்றையதினம் குறித்த 6 பேரும் கெஹல உல்ல பகுதியில் பாரவூர்தி ஒன்றில் மது அருந்திக் கொண்டிருந்தபோது, அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த பிரதேச மக்களில் இருவரைத் தாக்கி, பின்னர் அவர்கள் மீது பாரவூர்தியை ஏற்றிக் கொலைசெய்துள்ளனர் என்பது சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது. (க-இ)

## யாழ்ப்பாணத்தில் காற்று மாசு

கொழும்பு, நவ.12
உள்ளூர் மாசுபாடு மற்றும் வட இந்தியா உள்ளிட்ட அண்டை நாடுகளிலிருந்து வெளியேறும் புகை காரணமாக இலங்கையின் பல பகுதிகளில் காற்றின் தரம் ஆரோக்கியமற்ற நிலைக்குச் சென்றுள்ளதாக நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.
இதன்படி, யாழ்ப்பாணம், கதுருவெல, சிலாபம், அகரகம, வண்டூராகலை, திகன, மாதம்பகம, ஹங்கம, அக்கரைப்பற்று, கலவான, முள்ளியவளை, பன்னங்கண்டி, அடம்பன், உப்புவெளி மற்றும் கொழும்பு ஆகிய இடங்களில் காற்றின் தரம் குறைந்துள்ளது.
இந்த நிலை மார்ச் 2026 வரை நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாகக் குழந்தைகள், முதியவர்கள் மற்றும் சுவாசப் பிரச்சினைகள் உள்ளவர்களுக்கு கடுமையான உடல்நல அபாயங்களை ஏற்படுத்தும்.
எனவே, பொதுமக்கள் வெளிப்புற உடற்பயிற்சியைக் குறைக்கவும், ஜன்னல்களை மூடி வைக்கவும், வெளியே செல்லும்போது பாதுகாப்பு முகக்கவசங்களை அணியவும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

## தங்கம் விலை மீண்டும் உயர்வு

கொழும்பு, நவ.12
உலக சந்தையில் தங்கத்தின் விலையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதை அடுத்து இலங்கையிலும் தங்கத்தின் விலை அதிகரித்துள்ளது.
உலக சந்தையில் ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை 4,120 டொலரைத் தாண்டியுள்ளது.
இலங்கையில் தங்கத்தின் விலை சுமார் 8 ஆயிரம் ரூபா அதிகரித்துள்ளது.
இதன்படி நேற்றுக் காலை நிலைவரப்படி ஒரு பவுண் 22 கரட் தங்கம் 7 ஆயிரம் ரூபா அதிகரித்து 300,600 ரூபாவாகப் பதிவாகியுள்ளது.
அதேவேளை 317,000 ரூபாவாக இருந்த ஒரு பவுண் 24 கரட் தங்கத்தின் விலை நேற்று 325,000 ரூபாவாகப் பதிவாகியுள்ளது. (ச)



## கெஹலிய மகன் மீது குற்றப்பத்திரிகை

கொழும்பு, நவ.12
முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் மகன் ரமித் ரம்புக்வெலவுக்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு கொழும்பு மேல்நீதிமன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.
சட்டவிரோதமாகச் சொத்துகளைக் குவித்தார் என இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (ச-இ)

## 100 மில்லியன் டொலருக்கு ஆசிய வங்கி பச்சைக்கொடி

கொழும்பு, நவ.12
ஆசிய அபிவிருத்தி வங்கியால் நாட்டுக்கான 100 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவிக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.
நாட்டின் பேரின பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் நிலையான பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்திக் கொள்வதற்கு உதவி வழங்கும் நோக்கில் இந்தக் கடனுதவி வழங்கப்படுகின்றது.
இலங்கையின் நிதி மற்றும் கடன் ஸ்திரத்தன்மையை இயல்பு நிலைக்குக் கொண்டு வருகையில் பாராட்டத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளதாக கடன் தொகைக்கு அனுமதி வழங்கிய ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ச-இ)




## பிளான் பண்ணாட்டி இப்பிடித்தான்..!

சும்மா கிடந்த சங்கை ஆண்டி ஊதிக்கெடுத்தமாதிரி, சிவனே எண்டு தன்ரபாட்டில கிடந்த றோட் ஒண்டை 'பைப்' தாக்கிறம் எண்டு வெளிக்கிட்டு சழியப்பண்ணி, அதை இப்ப ஆபத்தான றோட்டா மாத்திட்டினம். கொடிகாமத்தில இருந்து வரணியால வடமராட்சிக்கு போற றோட்டுக்குத்தான் இந்த நிலைமை. இருபது முப்பது வருசத்துக்கும் மேல விமோசனமில்லாமல் பள்ளமும் திட்டியுமாக் கிடந்த றோட்டுக்கு கொஞ்சக் காலத்துக்கு முதல் தான் ஒருமாதிரி விமோசனம் கிடைச்சு, காப்பெற் றோட்டா மாறினது. முந்தியெல்லாம் அதால போய்வந்தாலே குடலிறக்கம் வாற அளவுக்கு வாகனங்கள் குலுங்கி, நெளிஞ்சு , பாய்ஞ்சு பறந்துதான் வரும். அந்த றோட்டைக் கடக்கிறதெண்டால் கிட்டத்தட்ட ஒண்டரை மணித்தியாலத்துக்கு மேல எடுத்தது. ஆனால் இப்ப காப்பெற்றா மாத்தினபிறகு அரைமணித்தியாலத்தில கடந்திடலாம்.

ரண்டு மூண்டு வருசமா நல்லா இருந்த றோட்டை ஆரோ கண்ணூறுபடுத்திட்டினம் போல. அடாது மழை பெய்தாலும் விடாது பைப்லைன் வேலை செய்வம் எண்டு , வரணி பிரளாக்குளத்தடியில இந்த றோட்டுக்குப் பக்கத்தில நீளமாக் கிடங்கு வெட்டியிருக்கினம். ஏற்கனவே பக்கத்தில குளம் இருக்கிறதால, றோட்டுச் சாய்ஞ்சிடும் எண்டு, அந்தப் பக்கமா கிட்டத்தட்ட நூறடி நீளத்துக்கு பலப்பான கொங்கிறீட் போட்டு, அதுக்கும் றோட்டுக்கும் இடையில மண் நிரப்பிவைச்சிருந்தவை. றோட்டுப் போட்ட பிறகு பெருமழையெல்லாம் அடிச்சு, குளம் நிரம்பி வழிஞ்சாலும்கூட கொங்கிறீட்டும் அசையேலை, றோட்டும் சாயேலை. ஆனால் இந்த முறை பைப் தாக்கிறதுக்கு வந்தவை வெட்டின வேகத்துக்கு, ஏற்கனவே மழை ஈரம் சுவறிக்கிடந்த கொங்கிறீட் ஆவெண்டு வாய்பிளந்து ஒருபக்கமாச் சாய, மண்ணும் கீழ இறங்கிட்டுது. நாலைஞ்சு நாளா இப்பிடித் தான் அந்த றோட்டுக் கிடக்குது. அதால போய்வாறவையெல்லாம் முழுறோட்டும் கீழ இறங்கிடுமோ எண்டு பயப்பிடுகினம். எப்பிடியும் அந்த றோட்டால ஓடித்திரியிற டிப்பர்காரர் நொந்துபோய்க் கிடக்கிற இந்த றோட்டை இன்னும் நோகப்பண்ணி, அதைக் கீழ இறக்காமல் விடமாட்டினம்.

எதையும் பிளான் பண்ணிச்செய்யாட்டி இப்பிடித்தான் நடக்கும். எங்கட நாட்டில திணைக்களங்களுக்கு இடையில ஒரு இணைப்பு இல்லை. இந்த றோட்டுப் போட முடிவெடுத்த வீதி அபிவிருத்தி அதிகார சபைக்காரரும், குடிநீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையும் கதைச்சுப்பேசி ரண்டுவேலையையும் ஒண்டாச் செய்திருந்தால் நேரமும் மிச்சம், காசும் மிச்சம், இப்பிடி நல்லா இருந்த றோட்டை நாசமாக்கிற வேலையும் இருக்காது. ஆனால் எங்கட ஆக்கள் எப்பவும் தங்கட வழி தனி வழி எண்டுதான் நிப்பினம். அப்பிடி தனியத்தனியச் செய்தால் தானே அவையின்ர பொக்கற்றை நிறைக்கமுடியும். கூட்டாச் செய்தால் கள்ளவேலையளுக்கு வழியில்லையே. சரி, ஆரும் என்னவும் அடிச்சிட்டுப் போகட்டும். முதலில இந்த வரணி, பிரளாக்குளதடியில போய் வாறவை நிம்மதியா போறதுக்கு உரிய வழியைச் செய்துவிடுவினமோ?

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்:** தாய்மாமன்வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். காரியங்கள் முடிவதில் சிறுதாமதம் ஏற்படக்கூடும். மாலையில் மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணைவழியில் எதிர்பார்த்த தகவல் கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.

**இடபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாய்வழி உறவினர்கள்மூலம் ஆதாயம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. சகோதரவகையில் சிறுசிறு சங்கடங்கள், வீண்செலவுகளும் ஏற்படக்கூடும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். மற்றவர்களுடன் பேசும்போது மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் பொறுமை அவசியம். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்க வாய்ப்பு உண்டு.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சிலருக்கு வீட்டில் தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். பிற்பகலுக்கு மேல் எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைக்கக்கூடும். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்னைகள் ஏற்படக்கூடும் .

**சிம்மம்:** எதிர்பார்க்கும் காரியங்கள் சாதகமாக முடியும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்களுடன் கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால் பொறுமையைக் கடைப் பிடிக்கவும். தாயின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். சிலருக்குத் எதிர்பாராத பணவரவுக்கும் பொருள்சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. பிள்ளைகளால் மகிழ்ச்சி ஏற்படும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவு ஒன்றைத் துணிச்சலுடன் எடுப்பீர்கள். வீட்டில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும். சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். பிள்ளைகள் கேட்டதை மகிழ்ச்சியுடன் வாங்கிக் கொடுப்பீர்கள்.

**விருச்சிகம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். பிற்பகலுக்கு மேல் உறவினர்கள் வழியில் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படும். கணவன் - மனைவிக்கிடையே கருத்துவேறுபாடு ஏற்பட்டு நீங்கும். சகோதரர்களுக்காக செலவு செய்ய நேரிடும்.

**தனுசு:** புதிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டாம். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களின் தலையீடு காரணமாகக் குடும்பத்தில் குழப்பம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் பொறுமை அவசியம்.

**மகரம்:** மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். தந்தைவழி உறவினர்களால் காரிய அனுகூலம் ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. கணவன்-மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்குவரும். சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் இழுபறியானாலும் முடிந்துவிடும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

**மீனம்:** இன்று பொறுமையும் சகிப்புத்தன்மையும் அதிகம் தேவைப்படும். ஆனால், தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். உறவினர்கள் வகையில் வீண்மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. புதிய முயற்சியைத் தவிர்ப்பது நல்லது.



# மருத்துவபீட மாணவர்களுக்கு யாழ்.நகரிலிருந்து பேருந்துச் சேவை

யாழ்ப்பாணம்,நவ.12

யாழ்ப்பாணம் பிரதான பேருந்து நிலையத்திலிருந்து யாழ்.மருத்துவபீடம் வரை இ.போ.ச. பேருந்துச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மருத்துவ பீட மாணவர்களின் நீண்டநாள் போக்குவரத்துப் பிரச்சினையைத் தீர்க்கும் நோக்குடன், யாழ்ப்பாணம் மாநகரசபையின் முயற்சியால் இந்தச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் மருத்துவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள் ஆகியோர் பங்கேற்றனர், (க-20)

# சேவைநலன் பாராட்டுவிழா

யாழ்ப்பாணம், நவ.11

யாழ்.மாவட்ட சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசக் கல்வி உத்தியோகத்தராகப் பதவியுயர்வு பெற்றுள்ள திருமதி கௌரி தேவி கடம்பானந்தனுக்கு சங்கானைப் பிராந்திய சபை நடத்தும் சேவைநலன் பாராட்டு விழா சங்கானைப் பிராந்திய சமாசப் பணிப்பாளர் ப.அருள்ராசன் தலைமையில் வட்டுக்கோட்டை மூளாய் வீதியிலுள்ள ஸ்ரீகணேஷ வாசிகசாலையில் எதிர்வரும் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு இடம்பெறவுள்ளது. இவர் யாழ்.மாவட்ட சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச சங்கானைப் பிராந்திய சபையில் கடந்த 14ஆண்டுகளாக வெளிக்கள அலுவலராகக் கடமையாற்றிய நிலையில் தற்போது சமாச கல்வி உத்தியோகத்தராகப் பதவியுயர்வு பெற்றுள்ளார். (ச-41)



# 'கொலஸ்திரோல் நோய்' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், நவ.12

சுகாதார மேம்பாட்டை நோக்கிய பயணத்தில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் பொதுமருத்துவ நிபுணர் செல்லத்துரை பிரசாத் எழுதிய 'கொலஸ்திரோல் நோய்' எனும் வழிகாட்டி நூல் வெளியீடு பருத்தித்துறை சூரிய மஹால் திருமண மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது.

பொதுமருத்துவ நிபுணர் க.சத்திய மூர்த்தி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தலைமையுரையை பொதுமருத்துவ நிபுணர் க.சத்திய மூர்த்தியும், வாழ்த்துரைகளைப் பேராசிரியர் மா.நடராஜசுந்தரம் மற்றும் இருதய மருத்துவ நிபுணர் ம.குருபரன் ஆகியோரும், நூல் வெளியீட்டு உரையை பொதுமருத்துவ நிபுணர் த. பேரானந்தராஜாவும், மதிப்பீட்டு உரையை யாழ். தாதிய பயிற்சிக் கல்லூரி அதிபர் சி. ஜெயக்குமாரும், ஏற்புரையை நூலாசானும் நிகழ்த்தினர்.

நூலைப் பொதுமருத்துவ நிபுணர் த.பேராணாந்தராஜா வெளியீட்டு வைக்க இருதய மருத்துவ நிபுணர் ம.குருபரன் பெற்றுக் கொண்டார். (ச-41-100)



# பரதநாட்டிய அரங்கேற்றம்

மன்னார், நவ.12

நிருத்திய நாட்டியாலய அதிபரும் ஆசிரியையுமான நாட்டியக்கலைமணி திருமதி அமலா அன்ரனி சுரேஷ்குமாரின் மாணவிகளான நாட்டியக் கலாஜோதி நிருபமா நகுலேந்திரன், நிருஜனா நகுலேந்திரன் ஆகியோரின் பரதநாட்டிய அரங்கேற்றம் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் விருந்தினராக ஜேர்மனி தமிழ்க் கல்விச் சேவைப் பொறுப்பாளரும் ஜேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவருமான பொ.சிறீஜீவகன் பங்கேற்றார். (ச-41-60)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



மரநடுகை மாதம் (நவம்பர்)

"பொருள்களின் உண்மையான இயல்புகளை நாம் சரியாகக் கருத்திற் கொண்டால் ஒவ்வொரு மரமும் தங்கத்தினாலோ வெள்ளியினாலோ ஆக்கப்பட்டிருப்பதைவிட அது பச்சையாக இருப்பதே அதி உன்னதமானது."

—மார்ட்டின் லூதர் (ஜேர்மனிய கத்தோலிக்க மதகுரு)—


# விபத்துகளைத் தடுக்க...!

நாட்டில் வீதி விபத்துகள் கடந்த சில ஆண்டுகளாகவே கவலை தரும் அளவில் அதிகரித்துவருகின்றன. ஆனால் இந்த ஆண்டு அவற்றின் எண்ணிக்கையும், உயிரிழப்புகளும் இன்னும் உயர்வடைந்துள்ளன. அநுராதபுரத்தில் நேற்றுமுன்தினம் நிகழ்ந்த பஸ் விபத்தில் மாணவர் ஒருவர் உட்பட ஐந்து பேர் உயிரிழந்த சம்பவம், நாட்டின் வீதிப்பாதுகாப்பு நிலை எவ்வளவு மோசமடைந்துள்ளது என்பதற்கு இன்னுமொரு சாட்சியாக மாறியிருக்கின்றது. இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்து கடந்த நவம்பர் மாதம் வரையில் ஆயிரத்து 781 வீதி விபத்துகள் பதிவாகியுள்ளன. அவற்றில் ஆயிரத்து 897 பேர் உயிரிழந்துள்ளனர் என்கின்றன பொலிஸ் தரவுகள். இலங்கை போன்ற ஒரு சிறிய நாட்டில் இத்தகைய எண்ணிக்கை அதிகமானதே. தினமும் செய்தியாகும் பஸ் விபத்துகள் பொதுப்போக்குவரத்தை தினமும் நம்பியுள்ள ஆயிரக்கணக்கான மக்களுக்கு நிச்சயம் அச்சத்தை ஏற்படுத்தும் என்பதை மறுக்கமுடியாது.

விபத்துகளுக்குப் பல்வேறு காரணங்கள் இருந்தாலும், இலங்கையில் பெரும்பாலும் சாரதிகளின் கவனக்குறைவே பல விபத்துகளுக்கு அடித்தளமிட்டிருக்கிறது. அதிக வேகத்தில் ஓட்டுவது, விதிகளை மீறுவது, கைபேசியில் உரையாடியவாறே வாகனத்தைச் செலுத்துதல் போன்ற செயல்கள் நிரந்தரமான ஆபத்துகளை உருவாக்குகின்றன. அதைவிட ஓய்வெடுக்காமல் தொடர்ச்சியாக வாகனத்தைச் செலுத்துவதால், வாகனச்சாரதிகள் சில வேளைகளில் சாரத்தியம் செய்துகொண்டிருக்கையிலேயே கண்ணயர்ந்தும் விடுகின்றனர். இந்தக் கண்ணயர்வு பல உயிர்களைக் காவுகொண்டும் விடுகின்றது. இவை தொடர்பில் பல விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும், வீதி விபத்துகளின் எண்ணிக்கையில் அவை தாக்கம் செலுத்துவதாக இல்லை. அதேபோன்று விதிகளை மீறும் சாரதிகளுக்கு கடுமையான தண்டனைகள் விதிக்கப்படுவது அரிது. பெரும்பாலும் தண்டப்பணத்தைச் செலுத்துவதோடு தப்பிவிடலாம் என்பதால், விதிகளை மீறுவதை ஒரு பாரதூரமான குற்றமாக சாரதிகள் எண்ணுவதில்லை. இத்தகைய மனோநிலையும் வீதிவிபத்துகள் அதிகரிப்பதற்கும், தொடர்வதற்கும் முதன்மைக் காரணமாக இருக்கின்றது.

வீதி விபத்துகளில் உயிரிழப்போர் பெரும்பாலும் இளவயதினரே. ஒவ்வொரு விபத்தும் ஒரு குடும்பத்தின் வாழ்வையே தலைகீழாக மாற்றிவிடுகின்றது; பலரின் கனவுகளையும் இலக்குகளையும் சிதைக்கின்றது. வீதிப்போக்குவரத்து விதிமுறைகளைச் சரியாகக் கடைப்பிடிப்போர் கூட, இன்னொருவரின் தவறான சாரத்தியத்தால் பாதிப்புகளை எதிர்கொள்ளவேண்டியிருக்கின்றது. இந்தச் சூழ்நிலையை மாற்றுவதற்கு நிச்சயம் காத்திரமான பல நடவடிக்கைகள் எடுக்கப்படுவது அவசியம். சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதிலும், சாரதிகளின் உடல் மற்றும் உள நிலைமைகள் தொடர்பாகவும் தொடர்ச்சியாகக் கண்காணிக்கக்கூடிய பொறிமுறைகள் உருவாக்கப்படுவது அவசியம். வீதி விபத்துகளைத் தடுப்பதற்கு தற்கால தொழில்நுட்பத்தின் உதவியுடன் எவ்வாறான நடவடிக்கைகளை எடுக்கமுடியும் என்பதை அரசாங்கம் சிந்திக்கவேண்டும். வெறுமனே விழிப்புணர்வுச் செயற்பாடுகளின் ஊடாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக்கொள்வது சாத்தியமற்றது. பொதுப்போக்குவரத்தைப் பாதுகாப்பாக மாற்றக்கூடிய - பிற நாடுகளில் நடைமுறைப்படுத்தப்படும் நடைமுறைகளைக் கண்டறிந்து அவற்றை நடைமுறைப்படுத்தவேண்டிய கடமையும் அரசாங்கத்துக்கு உள்ளது. அச்சம் தரும்வகையில் உயர்ந்து செல்லும் விபத்து உயிரிழப்புகளைத் தடுப்பதற்கு -எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்கு தீர்க்கமான மாற்றங்களை உடனடியாக மேற்கொள்ள வேண்டியதும் அரசாங்கத்தின் முன்னுள்ள முக்கியமான பணிகளில் ஒன்று.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



## இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் நாட்டின் அரசியலைப் பலப்படுத்தும்

### சுவிஸ் தூதரகச் செயலர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், நவ.12

இனங்களுக்கு இடையில் நல்லிணக்கம் ஏற்படுமாக இருந்தால், நாட்டில் அமைதி மற்றும் வன்முறையற்ற சூழல் உருவாகுவதுடன், அரசியல் ஸ்திரத்தன்மையையும் பலப்படுத்தும் என்று இலங்கைக்கான சுவிஸ் தூதரகத்தின் அரசியல் விவகாரங்களுக்குப் பொறுப்பான முதன்மைச் செயலர் ஜஸ்டின் பொய்லட் தெரிவித்தார். சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான கற்கை நிலையத்தின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற அரசியல் தீர்வும் பொறப்புக்கூறலும் எனும் கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் நல்லிணக்கம் ஏற்படுவதற்கு அரசியல் அமைப்பில் சீர்திருத்தம் அவசியம். தமிழ் மக்களுக்கான அதிகாரப்பகிர்வு நல்லிணக்கத்துக்கு வலுச்சேர்க்கும். இனங்களுக்கு இடையில் கடந்த காலங்களில் ஏற்பட்ட கசப்பான சம்பவங்கள் இனியும் ஏற்படாமல் இருக்க நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கு புதிய அரசியலமைப்பில் சீர்திருத்தம் அவசியம்- என்றார். (க-இ)

## 'பெக்கோ சமன்' மனைவி வழக்கு ஒத்திவைப்பு

வவுனியா, நவ.12

'பெக்கோ சமன்' என்பவரின் மனைவியான ஷானிகா லக்ஷானி என்ற பெண்ணுக்கு எதிராக வவுனியா நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு எதிர்வரும் 24 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என வவுனியா நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை உத்தரவிட்டுள்ளது.

வவுனியா குடிவரவு மற்றும் குடியகல்வுத்திணைக்களத்தில் போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து கடவுச்சீட்டுத் தயாரித்தமை தொடர்பில் 'பெக்கோ சமனின்' மனைவிக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## தென்கொரியாவில் இரு இலங்கையர் சடலமாக மீட்பு

தென்கொரியா, நவ.12

தென்கொரியாவின் தெற்கு கியோங்சாங்கில் உள்ள கோசியோங் கவுண்டியில் உள்ள மீன் பண்ணையொன்றின் தண்ணீர்த் தொட்டியிலிருந்து இரண்டு இலங்கையர்கள் உட்பட மூன்று தொழிலாளர்கள் நேற்றுமுன்தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். அவர்களின் இறப்புக்கான சரியான காரணத்தைக் கண்டறிய உடற்கூற்றுப்பரிசோதனை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்று தெற்கு கியோங்சாங் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க-இ)



## யானை தாக்கி ஒருவர் பலி!

கொழும்பு, நவ.12

மகாஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போகமுயாய வனப்பகுதியில் காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை பதிவாகியுள்ளது. கொக்கொட்டிச்சோலைப் பகுதியைச் சேர்ந்த 66 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ச-இ)

## மேல் மாகாணத்தில் வாகனத்திருட்டுகள்



கொழும்பு, நவ.12

மேல்மாகாணத்தில் வாகனத் திருட்டு அதிகரித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எப். யு. வுட்லர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு நகரத்தில் வீதியில் நிறுத்திவைக்கப்படும் முச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் களவாடப்படுகின்றன.

நவம்பர் 8 மற்றும் 9 ஆம் திகதிகளில் மாத்திரம் மேல்மாகாணத்தில் 10 மோட்டார் சைக்கிள்களும் 3 முச்சக்கரவண்டிகளும் திருடப்பட்டுள்ளதாகப் பதிவாகியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

நாளை
வியாழக்கிழமை - ஐப்பசி 27
13.11.2025
சுபநேரம் : 07.37 - 09.07
ராகுகாலம் : 01.37 - 03.07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்றல் உபகரணங்கள் வழங்கல்

யாழ்ப்பாணம்,நவ.12

நாவற்குழி 300 வீட்டுத்திட்டத்திலுள்ள முன்பள்ளியில் கல்வி பயிலும் சிறுவர்களுக்கும், புத்த விகாரைக் கிராம பள்ளிச் சிறுவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நாவற்குழியிலுள்ள விகாரை வளாகத்தில் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெறும்.

நாவற்குழி விகாராபதி சுமணதேரரின் ஒழுங்கமைப்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ம.கோணேஸ்வரன் தலைமையில் நிகழ்வு இடம்பெறும். (க-131)

## மாமனிதர் நடராஜா நினைவேந்தல் நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.12

யாழ். மாவட்ட தென்மராட்சி தொகுதி நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் மாமனிதர் நடராஜா ரவிராஜின் 19ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்றுமுன்தினம் தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு முன்னால் அமைக்கப்பட்டுள்ள திருவுருவச்சிலையருகே இடம்பெற்றது.



நிகழ்வில் மறைந்த நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் மாவை சேனாதிராசாவின் மகன் கலையமுதன், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சாவகச்சேரி நகரசபை உப தவிசாளர் ஞா.கிஷோர், சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் மு. கோகுல்ராஜ், சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர்கள் கலந்துகொண்டு மலரஞ்சலி செலுத்தினர். மாமனிதர் ந.ரவிராஜ் தலைநகர் கொழும்பில் வைத்து இனந்தெரியாத ஆயுததாரிகளால் 2006 ஆம் ஆண்டு சுட்டுப் படுகொலை செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-28)


## துணுக்காய் பிரதேச சபை
## 2026 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

துணுக்காய் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பொதுச்சந்தை, ஆட்டிறைச்சிக்கடைகள், மாட்டிறைச்சிக் கடைகள், கோழி இறைச்சிக் கடைகள் என்பவற்றை 01.01.2026 தொடக்கம் 31.12.2026 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கீழே குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

**கேள்விப் பத்திரம் வழங்கும் காலம்** :- 12.11.2025 –25.11.2025 (அலுவலக நாட்களில் மு.ப 8.30 பி.ப 3.00 வரை)
**கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி** :- 26.11.2025 மு.ப 10.00 மணி வரை
**கேள்வி திறக்கப்படும் திகதி** :- 26.11.2025 மு.ப 10.00 மணி
**கேள்வி திறக்கும் இடம்** :- துணுக்காய் பிரதேச சபை அலுவலகம்

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை **தவிசாளர், துணுக்காய் பிரதேசசபை, துணுக்காய்** என்ற முகவரியிட்டு அதற்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்துக்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு "** என்ற முகவரியிட்டு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**இறைச்சிக்கடை**

| இல | குத்தகை வகை | இடம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்கப்பட முடியாத கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 1 | ஆட்டிறைச்சிக்கடை | துணுக்காய் | 25,476.00 | 1,500.00 | 500 |
| 2 | மாட்டிறைச்சிக் கடை | துணுக்காய் | 258,446.00 | 2,500.00 | 500 |
| 3 | கோழி இறைச்சிக்கடை | துணுக்காய் | 39,050.00 | 1,500.00 | 500 |
| 4 | ஆட்டிறைச்சிக்கடை | மல்லாவி | 67,200.00 | 1,500.00 | 500 |
| 5 | மாட்டிறைச்சிக் கடை | மல்லாவி | 2,325,750.00 | 2,500.00 | 500 |
| 6 | கோழி இறைச்சிக்கடை | மல்லாவி | 1,890,000.00 | 1,500.00 | 500 |
| 7 | ஆட்டிறைச்சிக்கடை | ஜயன்கன்குளம் | 15,378.00 | 1,500.00 | 500 |
| 8 | மாட்டிறைச்சிக் கடை | ஜயன்கன்குளம் | 132,788.00 | 2,500.00 | 500 |
| 9 | கோழி இறைச்சிக்கடை | ஜயன்கன்குளம் | 27,610.00 | 1,500.00 | 500 |

**பொதுசந்தை**

| இல | குத்தகை வகை | இடம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்பட முடியாத கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 1 | துணுக்காய் பொதுச் சந்தையும் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையமும் | துணுக்காய் | 29,791.00 | 1,500.00 | 500 |
| 2 | ஜயன்கன்குளம் பொதுச் சந்தையும் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையமும் | ஜயன்கன் குளம் | 29,282.00 | 1,500.00 | 500 |
| 3 | மல்லாவி பொதுச்சந்தையும் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையமும் | மல்லாவி | 1,576,890.00 | 1,500.00 | 500 |

**நிபந்தனைகள்:**

1. கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் இலங்கை பிரஜையாகவும் தமது ஆள் அடையாளத்தை நிருபிக்கக்கூடியவராகவும் சான்றுகள் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
2. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறாகக் கணிக்கப்பட்டவர்கள் என தெரியவருமிடத்து கேள்விகோர தகுதியற்றவர்களாக கருதப்படுவர்.
3. எந்தவொரு கேள்வியையும் காரணம் தெரிவிக்காது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபை தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு. ஆகக் குறைந்த கேள்வி தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்பட மாட்டாது.
4. வியாபார உத்தரவுப் பத்திரக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.
5. சபையால் விதிக்கப்படும் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.
6. எம்மால் நிர்ணயிக்கப்படும் விலங்கறுமனையிலேயே இறைச்சிக்குரிய மிருகங்கள் அறுக்கப்பட வேண்டும்.
7. இறைச்சிக்காக ஆடு, மாடு கொல்லப்பட முன் எம்மால் குறிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைய நடந்து கொள்ள வேண்டும்.
8. மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
9. சித்தியடையும் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் மூன்றில் ஒரு பகுதிப்பணத்தை ஒரு வார காலத்திற்குள் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.

**தவிசாளர்**
**பிரதேசசபை,**
**துணுக்காய்.**



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 17 10 1953



இறப்பு 24 10 2024

**அமரர்.திருமதி.பிரேமகுமாரி கலைநாதன்**

**(ஓய்வு பெற்ற ஆசிரியை புங்குடுதீவு)**

**திதி: 12.11.2025**

ஓராண்டு கழிந்தாலும் ஓவியமாய் உங்கள் முகம்
நம்மை விட்டு அகலாது - உங்கள்
நினைவுகள் வருகையில் நிலைகுலைந்து
போகின்றோம் அம்மா!
உங்களை நினைக்காத நொடிகளில்லை.....
எம் அன்னையை என்றென்றும் நினைத்திருப்போம்..

**அன்னாரின் ஆத்மா இறைபதம் அடைய பிரார்த்திப்போமாக......**
**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!**

**98, 2/8, மனிங் பிளேஸ்,**
**வெள்ளவத்தை, கொழும்பு - 06**
**(புங்குடுதீவு - 1)**

**ஆறாத்துயருடன், குடும்பத்தினர்**



## வேலைக்கு ஆள் தேவை (ஆண்)

தனியார் நிறுவனம் ஒன்றின் கைதடியில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கு ஆண் வேலையாட்கள் தேவை.

1) அரிவுப்பட்டறையில் வேலை செய்வதற்கு (தேவையான விறகுகள் இயந்திரம் மூலம் வெட்டுவதற்கு (நன்கு அனுபவம் உள்ளவர்களுக்கு முன் உரிமை வழங்கப்படும்) - மாதாந்த சம்பளம் ரூபாய். 70,000/- தொடக்கம் வழங்கப்படும்.
2) களஞ்சிய அறை உதவியாளர் மற்றும் பொருட்கள் களஞ்சிய அறையில் இருந்து தொழிற்சாலைக்குள் பொருட்கள் கொடுப்பதற்கு

மாத சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்
மாதம் ஒன்றில் நான்கு நாட்கள் விடுமுறை
வயதெல்லை 25 க்கு மேல் இருக்க வேண்டும்.
கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்துடன் ஆர்வமுள்ளவர்கள் தொடர்புகொள்ளலாம்.

**0743910843**

(CS/59882) J-1



## காணவில்லை

09.11.2025 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 3.00 மணியளவில் யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தில் இருந்து **ஆனந்தராசா லோஜன் (வயது 26)** என்பவரை காணவில்லை. வெளிநாட்டில் இருந்து வந்த அவர் சற்றுத் தடுமாற்ற நிலையில் இருந்துள்ளார். அவரைக் கண்டவர்கள் தொடர்பு கொள்ளவும்.



**076 27 25 316**
**076 13 48 868**
**076 53 52 933**

(CS 59889) A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அதிகஷ்டப் பிரதேச

# அதிபர், ஆசிரியர்களுக்கு கொடுப்பனவு அதிகரிப்பு

கஷ்டப்பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் 20 ஆண்டுகளாக அதிகரிக்கப்படாதிருப்பதனால் ஆசிரியர்களை ஊக்குவிக்கும்வகையில் கொடுப்பனவை 1,500 ரூபாவால் அதிகரிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

2026ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்ட உரையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

கல்வி இலக்குகளை அடைவதில் அதிபர்களின் நிர்வாகப் பொறுப்புகள் மற்றும் பொறுப்புக் கூறலை அங்கீகரிக்கும்வகையில் கொடுப்பனவு உயர்த்தப்படும். இதற்கென ரூபா 1,000 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

(ச-இ)

**வேலையாள் தேவை**

கூலி வேலை, மில் வேலை, களஞ்சியக் காப்பாளர், கணணி அனுபவமுள்ளவர்கள்

தொடர்பு:- 077 772 2215

## 2026 ஆம் ஆண்டு
## வரைவு வரவு செலவுத்திட்டம்
## கரைதுறைப்பற்று பிரதேசசபை
## முல்லைத்தீவு மாவட்டம்

**2026** ஆம் ஆண்டு வரைவு வரவு செலவுத்திட்டம் **1987** ஆம் ஆண்டின் **15** ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் பிரிவு **169** இன் கீழ் பொதுமக்கள் பார்வைக்காக, **2025.11.12** ஆம் திகதி தொடக்கம் **2025.11.26** ஆம் திகதி வரையிலான அலுவலக நாட்களில் காலை **8.30** மணி முதல் மாலை **4.15** மணிவரை தலைமை அலுவலகம், உப அலுவலகங்கள் ( முல்லைத்தீவு, முள்ளியவளை, முள்ளிவாய்க்கால், செம்மலை, கொக்கிளாய் ) மற்றும் பொது நூலகங்களில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் தெரியப்படுத்துகின்றேன்.

**2026ம் ஆண்டு வரைவு வரவுசெலவுத்திட்ட அறிக்கை**

| | | |
|---|---|---|
| **வருமானம்** | | |
| சபையின் சொந்த வருமானம் | 105,821,989.00 | |
| அரசிறை மானியங்கள் நிர்வாக மீளளிப்புக்கள் | 42,719,857.00 | |
| எதிர்பார்க்கப்படும் மொத்த வருமானம் | | **148,541,846.00** |
| **செலவினம்** | | |
| மீண்டெழும் செலவுகள் | 124,641,778.20 | |
| மூலதனச் செலவுகள் | 23,900,000.00 | |
| எதிர்பார்க்கப்படும் மொத்த செலவினம் | | **148,541,778.20** |

**சின்னராசா லோகேஸ்வரன்**
**தலைவர்,**
**கரைதுறைப்பற்று பிரதேசசபை.**
2025.11.12

# மரண அறிவித்தல்

மலர்வு
18 . 08 . 1965



உதிர்வு
09 . 11 . 2025

### பாலசிங்கம் சுரேஷபவான்

நல்லூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் சுரேஷபவான் அவர்கள் கடந்த (09.11.2025) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் - தியாகேஷ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - ராசாத்தியம்மா தம்பதியரின் மருமகனும், யோகராணி அவர்களின் பாசமிகு கணவரும், மாதங்கி, அட்சுதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சத்தியபவான் மற்றும் கிருஷ்ணபவான் (Norway) ஆகியோரின் சகோதரனும், அனுசா (Norway) அவர்களின் மைத்துனரும், கௌதமி, திவ்யா, சுஞ்ஜெய் ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.11.2025) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.


**இல 20, சங்கிலியன் வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**
**மகள் - 076 308 8210**

(CS 30370) D*

# மரண அறிவித்தல்

தோற்றம்
12 . 02 . 1944



மறைவு
10 . 11 . 2025

### செல்லையா தில்லைநாதன்

சாவகச்சேரி நுணாவில் கிழக்கை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட செல்லையா தில்லைநாதன் அவர்கள் நேற்றுமுன்தினம் (10.11.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - தங்கம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - தங்கம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற தவபாக்கியத்தின் அன்புக் கணவரும், சுகந்தினி, அரவிந்தன், முகுந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருநேசன், தனுஷியா, சுவேதா ஆகியோரின் அன்பு மாமனும், தீபிகா, சஷிக்கா, அவந்திகா, அஷ்விக்கா ஆகியோரின் அன்புப் பேரனும், தனலட்சுமி, காலஞ்சென்றவர்களான ரங்கநாதன், சிவநாதன் மற்றும் குகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற தர்மராஜா மற்றும் சிதம்பரநாதன், கணேசராஜா, தங்கராணி, காலஞ்சென்ற ஜெயபாலன் மற்றும் புஸ்பராணி, வசந்தா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.11.2025) வியாழக்கிழமை முற்பகல் 09:00 மணியளவில் குகன்மில்லடி கல்வயலில் நடைபெற்று, முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(CS/36364)

# மரண அறிவித்தல்

தோற்றம்
04 . 07 . 1930



மறைவு
10 . 11 . 2025

### சின்னத்தம்பி தங்கம்மா

பன்னாலையைப் பிறப்பிடமாகவும், பலாலி கிழக்கை வசிப்பிடமாகவும், துர்க்காபுரம், தெல்லிப்பளையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி தங்கம்மா அவர்கள் நேற்றுமுன்தினம் (10.11.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளம்பலம் - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கச்சிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, விசாலாட்சி, தையல்நாயகி, செல்லம்மா ஆகியோரின் சகோதரியும், சுப்பிரமணியம், இராணி, இராஜேஸ்வரி (கனடா), பரமேஸ்வரி, பூமணி, மோகனா (நோர்வே), கமலபுஸ்பம் ஆகியோரின் பாசமிகு தாயாரும், பரமநாயகி, நல்லதம்பி, காலஞ்சென்ற காசிப்பிள்ளை, வன்னியசிங்கம், யோகேஸ்வரன், காலஞ்சென்ற தேவராஜன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், நவகுமார், சுபாசினி, சுவேந்தினி, விஜயகுமார், சதீஸ்குமார், மயூரதி, யசோதா, சபிதா, செந்தூரன், சங்கீதா, பவீசன், ஜெயரூபி, காந்தரூபி, பிரணவன், லவண்யா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.11.2025) புதன்கிழமை பிற்பகல் 01:00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, அன்னாரது பூதவுடல் தகனக்கிரியைக்காக தெல்லிப்பளை, கல்லுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் தின்ற இடங்களுக்கு அதிக நிதி ஒதுக்குங்கள்!

## ரவிகரன் எம்.பி. சுட்டிக்காட்டு


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திருமதி கலாவதி
பூலோகசிங்கம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை,
பகுதித் தலைவர்-
யாழ். இந்து மகளிர் கல்லூரி)

அன்னை மடியில் 18.02.1951
சிவனடியில் 18.10.2022

திதி: ஐப்பசி மாத
அபரபட்ச அட்டமி 12.11.2025

ஈர் ஐந்து மாதங்கள்
எம்மை சுமந்து பெற்ற
உங்களை இழந்து
மூன்றாண்டு ஆனதுவோ அம்மா
நித்தமும் எம் விழிகளில்
கண்ணீர் சிந்த வைத்து
எம் இதயத்தில் செந்நீர்
கசிய வைத்த எமையெல்லாம்
தவிக்கவிட்டு இவ்வுலகை நீங்கி
மூன்றாண்டு ஆனதுவோ!!!
வண்ணை வைத்தீஸ்வரனின்
பாதங்களில் உங்கள் ஆத்மா
இளைப்பாற அவனை
வேண்டுகின்றோம் அம்மா!

கணவர் இ. பூலோகசிங்கம்
மகன்- பூ.பிரணவன்
077 6184 616


**முல்லைத்தீவு, நவ.12**

**போருக்குப் பிறகான காலத்தில் வன்னி மாவட்டம் அபிவிருத்தியில் பெரும்பாலான துறைகளில் மிகவும் பின்னடைவாக காணப்படுகின்றது. எனவே இவற்றுக்கு அதிக நிதியொதுக்கி தெற்கைப்போன்று தன்னிறைவு பெற வழிவகுக்கவேண்டும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் 2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தின் இரண்டாம் மதிப்பீட்டு விவாதத்தில் பங்கேற்று உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வன்னி மாவட்ட மக்கள் மீன்பிடி, விவசாயம், சிறுகைத்தொழில், சுகாதாரம், போக்குவரத்து, கல்வி, சுற்றுலா, பாதுகாப்பு என வாழ்வுக்கும் வாழ்வாதாரத்துக்கும் நாளும் போராடிப் போராடி வாழுகின்ற வாழ்வியலை இந்த அரசும் தக்கவைக்கிறதா என்ற கேள்வியோடு மிகவும் நெருக்கமாகத்தான் இந்த வரவு-செலவுத்திட்டம் பயணிக்கப் போகிறது. இலங்கையிலே ஆதார மருத்துவமனைகளில் கூட பயிற்சி மருத்துவர்களைப் பேணுகிற இந்த அரசு மன்னார், முல்லைத்தீவு மாவட்டத்தின் உச்ச மருத்துவமனைகளுக்கு எப்போது அந்த வசதியை வழங்கப்போகிறது?


இலத்திரனியல் வள நிரப்பலுக் கான நிதி ஒதுக்கீடு அனைத்து மாவட்டங்களுக்கும் சமத்துவ அடிப்படையில் கிடைப்பதை தயவு செய்து உறுதிப்படுத்துங்கள்.

வீதிப் புனரமைப்பு, கிராமப்புற பாலங்கள் புனரமைப்பு, பிரதேசங்கள் மற்றும் கிராமங்கள் வரையான பேருந்து வசதி, பேருந்துத் தரிப்பிடங்களுக்கான தேவை என்பவற்றில் முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் - மாந்தை கிழக்குப் பிரதேசங்கள் கடுமையான சமச்சீரற்ற நிலைக்குச் சான்றாகின்றன. விவசாய உற்பத்திப்பொருள்களை சந்தைப்படுத்துவதிலும் ஊழியர்கள் பணிக்குச் செல்வதிலும், மாணவர்கள் பாடசாலையிலிருந்து மீண்டும் வீடு திரும்புவதி லும் நோயாளிகள் மருத்துவ வசதிகளைப் பெறுவதிலும் குறித்த பிரதேச மக்கள் சமமான அணுகலை இன்றுவரை பெறவில்லை.

போக்குவரத்துக்கான 456 பில்லியன் ரூபா நிதியிலே அவர்களின் இடர்களைக் களைவதற்கு வகைசெய்யுங்கள்- என்றார்.

(ச-246,26)


## மரண அறிவித்தல்



மலர்வு 25 . 06 . 1942

உதிர்வு 11 . 11 . 2025

### கலாபூஷணம் மயிலு கணேசலிங்கம்

அல்வாய் கேவோலையை பிறப்பிடமாகவும், மயிலிட்டி தினைப்புனத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கலாபூஷணம் மயிலு கணேசலிங்கம் (ஓய்வு நிலை எழுதுவினைஞர், மின்சாரசபை) அவர்கள் நேற்று (11.11.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயிலு - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பு - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் கமலாதேவி அவர்களின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் தங்கராசா அருந்ததியம்மா, சிவகுருநாதன், பாக்கியமலர் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற இராசரத்தினம், லலிதா மற்றும் தங்கராசா, சிவகுருநாதன், இராசதுரை, காலஞ்சென்ற துரைராசா (ஆயுள்வேத வைத்தியர்), காலஞ்சென்ற இராசையா, தவமணிதேவி மற்றும் தவேந்திரராசா (ஓய்வு நிலை கோட்டக்கல்வி அதிகாரி), செல்வநேசன் (பொடி) ஆகியோரின் மைத்துனரும், ஜெயகௌரி (நூலக உதவியாளர் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), தம்பேஸ் (அலுவலக உதவியாளர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி), ஆகியோரின் பாசமிகு தந்தையும், கலாநிதி குணேஸ்வரன் (ஆசிரியர் ய/சிதம்பரக் கல்லூரி), வினோதினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கலாகேசவன் (மருத்துவபீடம் யாழ் பல்கலைக்கழகம்), ஆதிகேசவன் (யா/ஹாட்லிக் கல்லூரி) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (12.11.2025) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 03.00 மணியளவில் அல்வாய் பாங்குவேம்படி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி

தினைப்புனம்,
கவிஞர் செல்லையா வீதி,
மனோகரா,அல்வாய்.

தகவல்:
க.தம்பேஸ் (மகன்) 077 616 7834
சு. குணேஸ்வரன் (மருமகன்) 077 612 0049



## மரண அறிவித்தல்



தோற்றம் 16 . 11 . 1950

மறைவு 11 . 11 . 2025

### சோமசுந்தரம் யோகரத்தினம்

நீர்வேலி தெற்கை பிறப்பிடமாகவும், கற்குழி வடக்கு சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் யோகரத்தினம் அவர்கள் நேற்று (11.11.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை - அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், சிவசோதியின் ஆருயிர்க் கணவரும், காலஞ்சென்ற சுபோதினி மற்றும் சண்தீபன் (பிரான்ஸ்), அஜந்தா, நிவேதிகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கைலினா (பிரான்ஸ்), சயந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆதவி, பிருத்திகன், யவிக்சன், சபினாஸ் ஆகியோரின் அன்புப் பேரனும், இராசலட்சுமி, குணரத்தினம், தயாநிதி, காலஞ்சென்ற விஜயரத்தினம் மற்றும் செல்வரத்தினம் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான கதிர்காமசாமி, சந்திரசேகரம் மற்றும் ரவீந்திரராசா, லட்சுமிதேவி, ஜீவமணி, சச்சிதானந்தசிவம், காலஞ்சென்ற தியாகராசா, பரமநாதன், காலஞ்சென்ற நவரத்தினம் மற்றும் சண்முகராசா, நாகராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.11.2025) புதன்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கெள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

076 928 8813

(CR 46276) D*

தகவல்:
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12.11.2025
புதன்கிழமை

புதன் பொய்கை

காலநேரத்துக்கு
எதிரான போராட்டமே
உண்மையான போராட்டம்
என்பதை தலைவர்கள்
புரிந்துள்ளார்கள்.

- ரொபின் சர்மா

# சுற்றுலாவுக்கான சிறந்த நகரமாக யாழ்ப்பாணம்

## களநிலைவரமும் எதிர்பார்ப்பும்










■ குலசிங்கம் வசீகரன்

சர்வதேச ரீதியாக சுற்றுலாத்துறை சார்ந்து யாழ்ப்பாணத்துக்கு மிகப்பெரிய ஒரு அங்கீகாரம் கிடைத்துள்ளது. லோன்லி பிளனட் என்கின்ற சுற்றுலாசார் இணையத்தளம் 2026ஆம் ஆண்டு பயணிக்கக்கூடிய 25 சுற்றுலாத் தளங்களை வரிசைப்படுத்தி உள்ளது. அதில் யாழ்ப்பாணம் இரண்டாம் இடத்தைப்பிடித்துள்ளது. இதற்கு முன்னரும் பல்வேறு தடவைகள் யாழ்ப்பாணம் சிறந்த சுற்றுலாத் தளமாகப் பல்வேறு சர்வதேச தரப்பினராலும் குறிப்பிடப்பட்டு இருந்தாலும், இம்முறை நாட்டுச் சூழ்நிலையை மற்றும் வடபகுதியின் சுற்றுலாத்துறை சார்ந்து ஏற்பட்டுவரும் மாற்றங்களால் லோன்லி பிளனட் இணையத்தின் அறிவிப்பானது முக்கியத்துவம் பெறுகிறது.

சுற்றுலாத்துறை மூலமாக அந்நியச்செலாவணியை ஈட்ட வேண்டிய கட்டாயத்தில் எமது நாடு உள்ளது. அதேபோல வடபகுதியும் பல்வேறு வழிகளிலும் தன்னை வளப்படுத்திக்கொள்ள, அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கும் முனைப்பிலும் உள்ளது. வடக்கிலேயே தொழில் வாய்ப்புக்களையும், வெளிநாட்டில் ஈட்டக்கூடிய அளவிலான வருமானத்தை ஈட்டும் வழிமுறைகளையும் கண்டடைய வேண்டிய தேவை எமக்குள்ளது. இவ்வாறான சூழ்நிலையில் மேற்படி சர்வதேச ரீதியாக யாழ்ப்பாணத்தின் பெயர் பரிந்துரைக்கப்படும் ஒரு சுற்றுலாத்தளமாக அறிவிக்கப்பட்டிருப்பது நிச்சயமாக வரவேற்கப்படவேண்டிய விடயமாகும்.

இந்த அறிவித்தலின் பிரதிபலிப்பாக வடபகுதியைச் சேர்ந்த சுற்றுலாத்துறைசார் அமைப்புக்கள், சுற்றுலாவிடுதிகள், சுற்றுலா ஒழுங்கமைப்பாளர்கள் மற்றும் சுற்றுலா சார் அரச அமைப்புகள் எனப் பலரும் தமது மகிழ்ச்சியைப் பெரியளவில் வெளியிட்டுவருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

நிச்சயமாக இந்த அறிவிப்பானது கொண்டாடப்படவேண்டிய ஒன்றுதான். இந்தப் பரிந்துரைப்பு நிகழும் விதத்தை பற்றியும், இந்த அறிவிப்பினால் ஏற்படப்போகும் மாற்றங்களையும் அவற்றை எதிர்நோக்க வடபகுதி சுற்றுலாத்துறை தயாராக உள்ளதா?, இனிமேல் முன்னெடுக்கப்பட வேண்டிய விடயங்களைப் பற்றியும் ஆராய்கிறது இந்தக் கட்டுரை.

### பரிந்துரைப்பின் பின்னணி

இந்த அறிவிப்பை வெளியிட்ட இணையத்தளமானது எவ்வாறு ஒரு சுற்றுலாத்தளத்தை இவ்வாறான பட்டியலில் உள்வாங்குகின்றது என்று பார்த்தோமானால், பொதுவாக இவ்வாறான இணையத்தளங்கள் மற்றும் சஞ்சிகைகளைச் சேர்ந்த ஒரு குழுவோ அல்லது தனி நபரோ புதிய இடங்களுக்குப் பயணிக்கின்றபோது அல்லது தகவல்களைச் சேகரிப்பதற்காகவே பயணித்து அந்த இடங்களைப்பற்றிய விபரங்களைச் சேகரித்து தமது தலைமை அலுவலகத்துக்கு அனுப்பிவைப்பார்கள். தலைமை அலுவலகத்தில் உலகளாவிய ரீதியில் கிடைக்கப்பெறும் பரிந்துரைகள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக வரிசைப்படுத்தி பட்டியலை வெளியிடுவார்கள். ஆக, யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து குறித்த விடுதிகளில் தங்கி, குறிப்பிட்ட இடங்களைப் பார்வையிட்டு, அனுபவங்களைப் பெற்று சென்றிருக்கக்கூடியவர்கள் செய்திருக்கக்கூடிய பரிந்துரையின் அடிப்படையிலேயே யாழ்ப்பாணம் 2026ஆம் ஆண்டுக்கான சுற்றுலாத் தளங்களின் வரிசையில் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது என்றே கருதவேண்டியுள்ளது.

இந்தக் கருதுகோளுக்கு மற்றுமொரு காரணமும் உள்ளது, சுற்றுலா செல்ல விரும்புவர்களுக்கு லோன்லி பிளனட் தமது இணையத்தளம் ஊடாக சுற்றுலாத் திட்டங்களை வழங்குகிறது. மற்றைய இடங்களைப் போல இலங்கைக்கான மாதிரி சுற்றுலாத் திட்டமும் குறித்த இணையத்தில் உள்ளது. ஆனால் அந்தத் திட்டத்தில் யாழ்ப்பாணமோ, அல்லது இலங்கையின் வடபகுதியில் எதாவது ஒரு பிரதேசமோ உள்வாங்கப்படவில்லை.

ஒரு சுற்றுலாத்தளம் என்று வருகின்றபோது முக்கியமாக இரண்டு விடயங்களை கருத்திற்கொள்ளலாம், முதலாவது புதிய விடயங்கள் இரண்டாவது கிடைக்கப்பெறும் சேவைகள். ஒரு சுற்றுலாப் பிரதேசத்துக்கு புதிய விடயங்களை மட்டும் கருத்திற்கொண்டு சுற்றுலாவிகள் வந்துவிடுவார்கள் என்று நாம் கருதிவிட முடியாது, கிடைக்கும் சேவைகளும் தரமானதாக இருக்க வேண்டும் என்பது முக்கியமான விடயமாகும். நிலைமைகள் இவ்வாறிருக்க ஒரு சுற்றுலாத்தளமாக வடபகுதி, குறிப்பாக யாழ்ப்பாணம் எதிர்பார்க்கப்படுகின்ற பெருமளவிலான சுற்றுலாவிகளை உள்வாங்கத் தயாராக உள்ளதா என்ற கேள்வி எழுகின்றது.

### சுற்றுலாவிகளை ஏற்க வடமாகாணம் தயாரா?

வடமாகாணத்தின் சுற்றுலாத்துறை பற்றிய தனிக் கரிசனையோடு 'வடமாகாண சுற்றுலாப் பணியகம்' 2018 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. ஏழு வருடங்கள் ஆகியும் இன்னும் வடபகுதி சுற்றுலாத்துறை சார்ந்து பல்வேறு விடயங்களிலும் பின்தங்கியே உள்ளது. முக்கியமாக சுற்றுலாவிகளுக்குத் தகுந்தவகையில் உட்கட்டுமான வசதிகள் பெரும்பாலும் செய்யப்படவில்லை என்பது ஒரு காரணம். இலங்கைச் சுற்றுலா வடபகுதியை வளர்த்தெடுப்பதில் பெருமளவு ஆர்வம் காட்டவில்லை என்பது ஒருபுறமிருக்க, வட பகுதியை சேர்ந்த சுற்றுலாவோடு தொடர்புடைய அரச திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள்கூட சுற்றுலா சார்ந்த காத்திரமான செயற்பாடுகளை போதியளவில் முன்னெடுக்கவில்லை என்பதே பரவலான குற்றச்சாட்டு.

தென்பகுதியைச் சேர்ந்த சுற்றுலா ஒழுங்கமைப்பாளர்கள் அனுராதபுரத்தைக் கடந்து தமது சுற்றுலாவிகளை அனுப்புவதில்லை, அதற்கு அவர்கள் தெரிவிக்கும் காரணங்களில் முக்கியமானது யாழ்ப்பாணத்துக்கு வர நீண்டநேரம் பயணம் செய்ய வேண்டி இருப்பது என்பதாகும். மேலும் சுற்றுலாவிகளுக்கு ஏற்றவகையிலான உட்கட்டுமான வசதிகள் வடபகுதியில் செய்யப்படாமை என்பதே. குறிப்பாக சுற்றுலாத் தளங்கள் சீரான முறையில் அடையாளப்படுத்தப்படாமை, அடையாளப்படுத்தப்பட்ட இடங்களில் காணப்படும் வசதியீனங்கள் என்பனவும் இதில் தாக்கம் செலுத்துகின்றன.

மேற்குறித்த கருத்துத் தொடர்பில் ஆழமாக நோக்குவோமானால், உண்மையில் நாங்கள், ஒரேதடவையில் பெரும்தொகையான பல்நாட்டு சுற்றுலாவிகளையும் கையாளக்கூடிய அளவுக்கு எமது சுற்றுலாத்துறையினை வளர்த்துக்கொள்ளவில்லை என்பதே உண்மை. அண்மையில் வடமாகாண சுற்றுலாப் பணியகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட செயலமர்வில் யாழ்ப்பாணத்தில் மட்டும் எண்பதுக்கும் அதிகமான சுற்றுலாத் தளங்களை அடையாளப்படுத்தியிருந்தோம். இவ்வாறு சுற்றுலாத்தளங்களை அடையாளப்படுத்தவே எமக்கு இத்தனை ஆண்டுகள் ஆகியிருக்கிறது. உலகளாவிய ரீதியில் சுற்றுலாத்துறை,

12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஐயோ... அம்மா எனக்குப் பயமாக இருக்கிறது

ஐயோ ... அம்மா
எனக்குப் பயமாக
இருக்கிறது

புலமைப்பரிசில் பரீட்சைக்கு
இன்னும் நிறைய காலம் இருக்கிறதா அம்மா?
அந்தக் கொஞ்சக் காலமும் இப்போதுபோல்
விரைவாகக் கழிந்து போய்விடும் அல்லவா?

பரீட்சை முடிந்தவுடன்
செய்திட எனக்கிருக்கிறது
பெரும் வேலைகள் ஏராளம்

களஞ்சிய அறையிலிருந்து சைக்கிளை
வெளியில் எடுத்து
சிலந்தி வலைகளைத் தூசுகளைத் துடைத்து
நண்பர்களுடன் மிதித்துச் செல்லவேண்டும்

தோட்டத்தின் கீழே சென்று
வண்ணாத்திகள் பறவைகளுடன்
சற்றுநேரம் கதைத்துக் கொண்டிருக்க வேண்டும்

கால்வாயில் இறங்கி பேத்தைக் குட்டிகளுக்கு
சோற்றுப் பருக்கைகளை
சாப்பிடக் கொடுக்கவேண்டும்.

களைப்புறும் வரையில்
கால்கள் வலித்திடும் வரையில்
தங்கையுடன் முற்றத்தில் விளையாடவேண்டும்

என்றாலும் அம்மா, எனக்குப் பயமாக இருக்கிறது

சைக்கிள் மிதிப்பது எப்படி என்பது
மறந்துவிடுமோ ...
வண்ணாத்திகள், பறவைகள்
என்னை அடையாளம் தெரியாமல்
கதைத்திடாமல் இருந்திடுமோ ...
பேத்தைக் குட்டிகள் என்னைக் கண்டதும்
பயந்து ஒளிந்திடுமோ ...
... கால்கள் சிக்கி

சிங்களத்தில் துசாரா ஐயம்பதி
தமிழில் இப்னு அஸூமத்



# இறையினும் இனியார்..!

கண்ணிறைந்த தேசம் கனவானாலும்
உயிர்கொண்ட உணர்வு அற்றுப் போகாமல்
மண்மீது கொண்ட பற்று உயிரினும் உச்சம் என
உடல் கொண்ட உயிரினைத் துச்சமாய் எண்ணி

களம் கண்டு விதையாகி விடுதலை விருட்சக் கனவுடன்
கல்லறைத் தூக்கதிலும் தன்னாட்சிக் கனவுகாணும்
இறையினும் இனியாரைக் காந்தமும் மொட்டவிழ்ந்து
கனம் பண்ணும் கண்ணியம் மிகுந்த கார்த்திகையிது

அபர்ணன் ரவிவர்மன்



# மாதரை மறந்த பழமை!



எஸ்.நிஷாந்தினி

புது உலகை நோக்கிப் பயணிக்கும் நவீனமானது பழமையைக் கண்டு கொள்ளாமல் வேகநடை போடுகின்றது. புதுமைக்கு வந்தனம் சொல்லி பழமையை வரவேற்க எண்ணும் மனதுக்குப் புரிவதில்லை பழமை, பழமை ஆகி விட்டது என்று. அந்த வகையில் பழமொழிகள் இன்றைய சமூகத்தினரிடம் மருவிச் செல்கின்றன. காக்கப்படவேண்டியவை இன்று காற்றுடன் சென்றுகொண்டிருக்கின்றன.

அந்த வகையில் வலிகாமத்தில் பேசப்படும் பெண்ணியம் சார் பழமொழிகளே இவை.

'மாமியார் உடைத்தால் மண் குடம், மருமகள் உடைத்தால் பொன் குடம்' அதாவது ஒரு தவறினை வீட்டில் மாமியார் செய்தால் அது பெரிதாகக் கருதப்படுவதில்லை. அதுவே மருமகள் செய்தால் மாமியார் பெரிதாக்கி விடுவார் என்பதனைக் கூற இந்தப் பழமொழி பயன்படுத்தப்பட்டதாகத் தெரியவருகின்றது.

'மாமியார் உழைத்தால் மண்ணுக்கு உரம் மருமகள் உழைத்தால் பொன்னுக்கு உரம்' என்று பழமொழியையும் பயன்படுத்தக் காண்கின்றோம். இது பெண்ணின் வல்லமையைக் கூறுவதாக அமைகிறது.

அதாவது விவசாயி வீட்டில் மாமியாரும் மருமகளும் சேர்ந்து நிலத்தில் உழைத்தால் பொன்னும் பொருளும் சேரும் என்பதுதான் இதன் கருத்தாக காணப்படுகிறது. 'தாயைத் தண்ணி கரையில பார்த்தால் பிள்ளையை வீட்டில் பார்க்க வேண்டுமா?' என்ற பழமொழியையும் வலிகாமத்தில் பயன்படுத்துகின்றனர். அதாவது தாயின் நடவடிக்கையை வைத்து அவளின் பிள்ளையின் வளர்ப்பைக் கணித்துக் கூறுவதாக இப்பழமொழி காணப்படுகின்றது.



'சேலை கட்டிய மாதரை நம்பாதே' என்று சிலர் கூறுகின்றனர். அதாவது சேலை அணிந்த பெண்ணை நம்பாதே என்று எல்லோரும் எல்லோரும் பொருள் கொள்ளுவர். ஆனால் இதன் உண்மைக் கருத்து யாதெனில் 'சேல் அகட்டிய மாதரை நம்பாதே' அதாவது சேல் என்றால் கண். கணவனுடன் இருக்கும்போதே இன்னொரு ஆணைப் பார்க்கும் பெண்ணை நம்பக்கூடாது என்பதாகும்.


பழமொழிகளில் புதுமையான கருத்துகள் நிரம்பியிருந்தாலும் பெரும்பாலானவை ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிமோனியா

## கவனிக்கப்பட வேண்டிய நோய் நிலை

நடராசா கோபிராம்



நிமோனியா நோய்க்காக ஒரு தினம் அறிவிக்கப்பட்டு, அந்தத் தினத்தை வருடாவருடம் நினைவுபடுத்துவது, நிமோனியா எனப்படும் நுரையீரல் தொற்றுநோய் உலகளாவிய அளவில் எவ்வளவு மோசமான விளைவுகளை ஏற்படுத்துகின்றது என்பதை நினைவூட்டுவதற்காகும்.

சிறுவர்கள் மற்றும் முதியோர் வாழ்க்கையை மிகுந்த ஆபத்தில் ஆழ்த்தக்கூடிய நோயாக நிமோனியா கருதப்படுகிறது. இந்தநோயால் நுரையீரலின் உள்ளே உள்ள அல்வியோலி எனப்படும் காற்றுப் பைகளில் நீர் மற்றும் பசை போன்ற திரவங்கள் தேங்கி, சுவாசத்தைக் கடினமாக்குகிறது. இதைச் சாதாரண காய்ச்சல் அல்லது இருமல் என்று பலர் நினைத்துக்கொள்ளலாம், ஆனால் கவனிக்காமல் விட்டால் உயிருக்கு அச்சுறுத்தலாக மாறும் தன்மையைக் கொண்டது. உலக சுகாதார அமைப்பின் கணக்கெடுப்புகளின்படி, ஒவ்வொரு ஆண்டும் 7 மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் நிமோனியாவால் பாதிக்கப்படுகின்றனர், குறிப்பாக ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் வயது முதிர்ந்தவர்கள் இதில் பெரிதும் ஆபத்துக்கு உள்ளாகின்றனர். நிமோனியா மரணத்தை ஏற்படுத்தும் திறன் கொண்ட ஒன்றாக இருந்தாலும், அதைத் தடுப்பதற்கும் சிகிச்சையளிப்பதற்கும் ஏராளமான மருத்துவ வழிமுறைகள் இன்று உலகில் உள்ளன. இருப்பினும் இந்த நோய் இன்னும் பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பறிப்பதற்கு ஒரு முக்கியமான காரணம், மருத்துவ அணுகல், வாழ்வாதார நிலை, சமூக விழிப்புணர்வு, சுகாதாரக் கல்வி போன்ற துறைகளில் உள்ள சமச்சீரற்ற நிலைமைகளே ஆகும். குறிப்பாக வறிய நாடுகளிலும், சுகாதார வசதி குறைந்த சமூகங்களிலும் இந்த நோய் மிகுந்த தீவிரமடைந்து உயிரிழப்புகளை ஏற்படுத்துகிறது.

**இலங்கையில் நிமோனியா**

இலங்கையில் சுகாதார அமைப்புகள் பல முன்னேற்றங்களைப் பெற்றிருந்தாலும், நிமோனியாவால் மருத்துவமனையில் சேர்க்கப்படும் குழந்தைகளின் விகிதம் இன்னும் கவலைக்கிடமான அளவிலேயே உள்ளது. நகர்ப்புறங்களில் காற்று மாசு அதிகரிப்பு, கிராமப்புறங்களில் வீட்டுச் சமையலில் உருவாகும் புகை நேரடியாக சுவாசப்பாதையை பாதிப்பது, ஏழைக் குடும்பங்களில் ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் மருத்துவ சேவைகளைப் பெறும் தாமதம் ஆகியவை இணைந்து நிமோனியாத் தாக்கங்களைத் தீவிரமாக்குகின்றன. இந்த நோய் உருவாகுவதற்குக் காரணமாக பாக்டீரியா, வைரஸ், பூஞ்சை போன்ற பல நோய்க்கிருமிகள் செயல்படுகின்றன. நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்களுக்கு இந்த நோய் அதிக ஆபத்தானதாகிறது. சிறுவர்களில் தாய்ப்பால் குறைவாகக் கிடைப்பதும் நிமோனியாவின் சாத்தியத்தை அதிகரிக்கின்றது. நிமோனியாவால் உடல் ரீதியாக மட்டுமல்ல, மன நல ரீதியாகவும் பல தாக்கங்கள் ஏற்படுகின்றன. சுவாசக்குறைவு போன்ற அறிகுறிகள் நோயாளிக்குள் பயத்தை உருவாக்கும். குழந்தைகள் மருத்துவமனையில் சிகிச்சை பெறும் அனுபவம் அவர்களின் மனநிலைக்குள் கவலை, பயம், அழுகை போன்ற உணர்ச்சிகளை உருவாக்கும். குடும்பத்தினருக்கும் இதனால் மனஅழுத்தம் ஏற்படுகிறது. குறிப்பாக ஒரு குடும்பத்தில் ஒரு குழந்தை அல்லது ஒரு முதியவர் தீவிரநிலையில் இருப்பின், குடும்ப உறுப்பினர்கள் சந்திக்கும் உணர்ச்சிச் சுமை, பொருளாதாரச் சுமை ஆகியவை வாழ்க்கைத் தரத்தையே பாதிக்கின்றன. மேலும் உடல் நலக் குறைவால் பள்ளிக்குச் செல்லமுடியாத சிறுவர்கள் கல்வி முன்னேற்றத்தில் பின்னடையும் வாய்ப்பு அதிகம். இது அவர்களின் எதிர்கால திறனையும் பாதிக்கக்கூடிய ஒரு நீண்டகாலத் தாக்கமாகும்.


**தடுப்பூசியே பிரதானம்**

நிமோனியாவுக்குத் தடுப்பூசி என்பது மிக முக்கியமான பாதுகாப்புத் தீர்வாக அமைந்துள்ளது. எனினும், பல பகுதிகளில் இந்தத் தடுப்பூசிகள் குறித்த விழிப்புணர்வு குறைவாக உள்ளது. அதேபோல் முதியவர்களுக்கு இன்ப்ளுயன்ஷா தடுப்பூசி மிகவும் அவசியமான ஒன்று. தடுப்பூசி பெற்ற நாடுகளில் நிமோனியாத் தாக்கமும் மரண விகிதமும் கணிசமாக குறைந்திருப்பதை ஆராய்ச்சிகள் உறுதிப்படுத்துகின்றன. தடுப்பூசி மட்டுமல்ல, வீட்டுக்குள் காற்றோட்டம் சரியாக இருக்க வேண்டும், புகைபிடித்தல் முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும், மரம், நிலக்கரி, பிளாஸ்டிக் போன்றவற்றை தீக்காய்ச்சும் வீட்டுச்சமையலைக் குறைக்கவேண்டும். இதே சமயம் நோய் வந்த பிறகு உடனடி மருத்துவப் பராமரிப்பு மிக அவசியம். பலர் இருமலை ஒரு சாதாரண பிரச்சினையென நினைத்து பல நாள்கள் புறக்கணிக்கின்றனர். இந்த தாமதமே நோயைத் தீவிரப்படுத்துகிறது. இந்த நோய் சமூக அமைப்பிலும் நேரடியாக தாக்கம் ஏற்படுத்துகிறது. மருத்துவச் செலவுகள் அதிகரிப்பதால் வறிய குடும்பங்கள் பொருளாதாரச் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். வேலை செய்ய முடியாததால் வருமானம் குறைகிறது. பெண்களுக்கு வீட்டில் அதிக பராமரிப்பு பொறுப்புகள் வந்து, அவர்களின் கல்வி, வேலை, தனிநபர் வளர்ச்சி ஆகியவை பாதிக்கப்படுகின்றன. சமூகத்தில் ஆரோக்கியத்தைப் பற்றிய விழிப்புணர்வு குறைவாக இருப்பது இந்த நோயைப் பெரிதாக்கும் காரணிகளில் ஒன்றாகும். ஒவ்வொரு மனிதரும் சுவாச ஆரோக்கியம் பற்றி அறிந்து செயற்பட வேண்டிய தேவையுண்டு. பள்ளிகளில், சமுதாய மையங்களில், மருத்துவ முகாம்களில், சமூக ஊடகங்களில் நிமோனியாவை பற்றிய தகவல்கள் பரவ வேண்டும். தகவல் பரவல் அதிகரித்தால் உயிர்கள் காப்பாற்றப்படலாம்.

இன்றைய காலத்தில் மருத்துவ அறிவியல் பல முன்னேற்றங்களை அடைந்துள்ளது. நிமோனியாவைக் கண்டறியும் விரைவான பரிசோதனைகள் உருவாக்கப்பட்டுள்ளன. புதிய தடுப்பூசிகள் மற்றும் அதிக எதிர்ப்புச் சக்தி கொண்ட நோய் வகைகளுக்கு எதிரான ஆன்டிபயாட்டிக் மருந்துகள் ஆய்வில் உள்ளன. காற்று மாசு கண்காணிப்பு தொழில்நுட்பங்கள் விரைவாக மேம்படுத்தப்பட்டுள்ளன. செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான சுவாசக் கண்காணிப்புக் கருவிகள் மருத்துவமனைகளில் பயன்படுத்தப்படுகின்றன. இவை எதிர்காலத்தில் நிமோனியாவால் ஏற்படும் மரண விகிதத்தை மேலும் குறைக்கும் என நம்பப்படுகிறது.

இவை எல்லாவற்றையும் பொருத்தமாக எடுத்துக் கொண்டால், நிமோனியா ஒரு சராசரி நோயல்ல என்பதை மிக தெளிவாக உணரமுடிகிறது. நிமோனியாத் தடுப்பூசி, சுத்தமான வாழ்வுமுறை, தாய்ப்பால் ஊட்டம், காற்று மாசைக் குறைத்தல், உடனடி மருத்துவ அணுகல், சிறுவர்கள் மற்றும் முதியவர்களுக்கு தனிப்பட்ட ஆரோக்கியப் பராமரிப்பு ஆகியவை மிகவும் அவசியமான நடவடிக்கைகளாகும். உலக நிமோனியா தினம் எங்களை நினைவூட்டும் ஒரே உண்மை 'நுரையீரல் ஆரோக்கியம்' மட்டுமே. நிமோனியாவைத் தடுப்பதும், குணப்படுத்துவதும் நமது கைகளிலேயே இருக்கிறது. விழிப்புணர்வை உருவாக்குவோம், செயற்படுவோம், உயிர்களைக் காப்போம்.

**இன்று சர்வதேச நிமோனியா தினமாகும். அதை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூடநம்பிக்கை என்னும் அரக்கனை வதம் செய்ய வேண்டியது அவசியம்

ஆனையூர்க் கவிராயர்

மானிடப் பண்பியல்பு எனப்படுவது, மானிட நடத்தை சார் உயரிய செயலோங்கு நிலையில், ஒவ்வொரு மானிட ஜீவனும் தாம் ஏற்கனவே உள்வாங்கிய ஒவ்வொரு விடயக்கோலங்களிலுமான அறிவுத் திரட்சியின் ஈர்ப்பு நிலையின் பாற்பட்ட இயங்குநிலையே எனக் கொள்ளமுடியும். இந்தச் செயன்முறையானது ஆய்வறிவற்ற விஞ்ஞான வளர்ச்சி குன்றிய ஆதிகால மனித சமூகங்களில் அக்கால சூழலுக்கேற்ப புலனுணர்வுகள் மற்றும் உய்த்துணர்வியல்களுக்கமைய, பல வகையிலான நம்பிக்கைகள் தோற்றம் பெற்று வளர்ச்சியுறக் காரணியாக அமைந்துள்ளது எனலாம். இந்நிலையில் வாழ்வியலம்சங்களான அரசியல், பொருளாதார, கல்வியியல், மத நம்பிக்கைகள் முதலானவை வாழ்வியல் பரிமாணங்களாக புகுமுக நிலையில் இருந்து வளர்ச்சியடைந்து பேரெழுச்சி காண்கையில் இந்நம்பிக்கைகளும் அசுர வளர்ச்சி கண்டு பல்வேறு உளவியல் சார் விடயத்தொகுதிகளாக மனித மனங்களில் தடம் பதித்து நீங்காத இடம்பிடித்துக்கொண்டுள்ளன.

இன்று நாம் வாழ்வது இவ்வுலகையே சுருக்கி உள்ளங்கையில் கொண்டுதரும் நவீன விஞ்ஞான உலகிலாகும். மனிதன் தன்னையும் தன்னைச்சுற்றியுள்ளனவற்றையும் மட்டுமல்லாது இவ்வண்டமெங்கும் பரந்து சஞ்சரிக்கும் கோள்கள் நட்சத்திரங்களைப் பற்றி எல்லாம் ஆய்வு செய்து பிரபஞ்ச உண்மைகளை உலகிற்கு படம்பிடித்துக் காட்டும் உன்னத நிலைக்கு உயர்ந்துள்ளான். இத்தகைய அறிவினாட்சி நிகழும் விஞ்ஞான உலகில் மனிதஇனம் அறியாமை இருளால் ஆட்கொள்ளப்படுவதை அனுமதிக்க முடியுமா? விஞ்ஞானத்தின் விளைநிலமான இப் பூமியில் அஞ்ஞானத்தை அனுமதிக்கவேண்டுமா?

### நம்பிக்கைகளும் மூடநம்பிக்கைகளும்

ஒவ்வொரு மனிதனும் தனது சுய இயல்திறன் மீதும் வெளியில் இருந்து எதிர்பார்க்கும் காரணிகள் மீதும் நம்பிக்கை வைத்தே செயலாற்றுகின்றான். வெளியில் இருந்து எதிர்பார்க்கப்படுபவை எனும்போது அவை தனது குடும்பத்திலிருந்தோ சமூகத்திலிருந்தோ அல்லது இயற்கையிடமிருந்தோ கிடைக்கக்கூடியவையாகவோ இருக்கமுடியும். கடவுள் நம்பிக்கையையும் இதனுள் அடக்கமுடியும்.


இவை ஒரு செயலின் விளைவு குறித்து அதன் சாதக, பாதகத் தன்மை குறித்த எதிர்பார்ப்புகள் தொடர்பிலானவையாகும். இந்த நம்பிக்கை வகைகளைவிட தொன்றுதொட்டுப் பின்பற்றப்பட்டுவரும் பல்வேறு செயல்நிலை தொடர்பிலான நம்பிக்கைகள் இடத்துக்கிடம் வேறுபாட்டு நிலைகளுடன் கூடிய வகையாக சமூகமட்டத்தில் புரையோடியிருப்பதை அவதானிக்கலாம். இது தொடர்பில் நாம் விழிப்புணர்வுடன் கூர்ந்து நோக்குவது காலத்தில் தவிர்க்கமுடியாத தேவையாகும்.

ஒவ்வொரு மானிட சமூகத்திலும் குறிப்பாக எமது தமிழ்ச் சமூகத்தில், கன்ன பரம்பரைக் கதைகள் வழியாகவும் பெற்றோரிடமிருந்தோ சமூகத்திடமிருந்தோ இளவயதிலிருந்தே கடத்தப்பட்டு பிள்ளைகளுக்குப் புகட்டப்படும் கருத்தியல்கள் பலவும், மூட நம்பிக்கைகள் என்ற வகையறாக்களுள் வகைப்படுத்தப்பட வேண்டியவையாகவே தம்மை இனங்காட்டுகின்றன. செய்வினை, சூனியம் என பயமுறுத்தும் மாந்திரீகம், சமூகமட்டத்தில் முழுவதுமாக வியாபித்துள்ள கிரக சோதிடம், எண் சோதிடம், கைரேகை சாஸ்திரம் முதலான சோதிட நம்பிக்கை, சாதீயக் கோட்பாடுகள், முற்பிறப்பு, மறுபிறப்பு, சொர்க்கம், நரகம் முதலான நம்பிக்கைகள், சகுனம் பார்த்தல், பல்லி சொற்பலன் முதலாக நீண்டு செல்லும் இந்நம்பிக்கை வகைகள் எவ்வித விஞ்ஞான ஆய்வியலுக்கும் நூற்றுக்கு நூறு வீதம் உட்படுத்தி நிரூபிக்க முடியாதவையாகவே தோற்றமுறுகின்றன. இவை தொடர்பில் விஞ்ஞான ஆய்வியலுக்கு உட்பட்டு விழிப்புணர்வு பெறுதல் இன்றியமையாத ஒன்றாகும்.

செய்வினை, சூனியங்கள், பேய், பிசாசுகள் முதலான நம்பிக்கைகள் எமது மக்களை பெரும் பயப்பிராந்தியில் சிக்கவைத்து வீணான பணச்செலவுகளை உண்டு பண்ணுகின்றன. இவை தொடர்பில் அறிவியல் ரீதியில் நிதான சிந்தனையுடன் நாம் ஒவ்வொருவரும் செயற்படவேண்டும். இதுமாத்திரமின்றி நோயால் பீடிக்கப்பட்ட ஒருவர் மருத்துவ சிகிச்சைக்கு உட்படுத்தப்படும் சமகாலத்தில், மந்திர தந்திரங்களில் விற்பன்னர்கள் என நம்பப்படுவோரை நாடி, பணத்தை வாரி இறைப்பவர்களும் சமூகத்தில் இருக்கத்தான் செய்கின்றனர். மந்திர தந்திரங்கள் மருந்து மாயங்கள் எனப்படும் விஞ்ஞான ரீதியாக நிருபிக்கமுடியாத இந்த மூடநம்பிக்கைகள் உறவினர்கள் அயலவர்களிடையே பெரும் பகைமையைக்கூட உருவாக்கி வாழ்நாள் வைரிகளாக்கும் சக்திவாய்ந்தவையாகவும் காணப்படுகின்றன. வெறும் யூகங்களும் நம்பிக்கைகளும் இன்றைய விஞ்ஞான உலகில் முழுச்சமூகத்தையும் ஆக்கிரமித்திருப்பது விழிப்புணர்வற்ற செயலன்றி வேறேது?

### சோதிட நம்பிக்கைகள்

தமது எதிர்காலம் எப்படி இருக்கப்போகின்றது என்பதினை அறிவதில் எல்லோருமே ஆர்வமுடையவர்களாகவே உள்ளனர். இந்த மிகையார்வமே சோதிட நம்பிக்கை வலுப்பெறத் தூண்டுகோலாய் அமைந்து விடுகின்றது. இப்போது மனித இயல்பு காரணமாக முக்காலம் பற்றி எடுத்துரைக்கக் கூடியதாக நம்பப்படும் கிரக சோதிடம், எண் சோதிடம், கைரேகை சாஸ்திரம் ஆகிய கலைகள் மனிதனை ஆட்கொண்டு அடிமைப்படுத்திவிடுகின்றன. ஆனால் நம்பிக்கை என்பது நூறு விழுக்காடு உண்மையானதோ நிஜமானதோ அல்ல என்பதனை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். கிரகசோதிடம் பற்றி நாம் ஆழ்ந்து நோக்கும்போது, ஒரு மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான அனைத்து நிகழ்வுகளும் கிரகங்களின் சக்தியால் நிகழ்வதாக நம்பவேண்டியுள்ளது. அதாவது நமது பூமிக்கும் சூரியனுக்கும் இடையே உள்ள எமது புரிதிறனுக்கு உட்பட்ட தொடர்பு இருப்பதைப்போல் ஏனைய கிரகங்களுக்கும் பூமிக்கும் இடையே மனித புலனுணர்வுகளுக்கு அப்பாற்பட்ட தொடர்பு இருக்கவேண்டும். இத்தொடர்பினை ஐசாக் நியூட்டன் புவியீர்ப்பு விசையினைக் கண்டுபிடித்து எம்மையெல்லாம் உய்த்துணர வைத்ததைப்போல ஏன் விஞ்ஞான உலகினால் இதுவரையில் கண்டுபிடிக்க முடியவில்லை....? சோதிடக்கலையின் ஊடாக ரிஷி முனிவர்கள் வானியல் தொடர்பிலான எத்தனையோ உண்மைகளை உலகிற்கு வழங்



கியுள்ளமை மாபெரும் சாதனையாகும். ஆயினும் விஞ்ஞான முரண்பாடுகள் உள்ள விடயங்கள் இருக்கத்தான் செய்கின்றன. காலநேரங்கள் சரியில்லை என்று காரியங்களைப் பிற்போடல் பொருத்தமில்லை எனக் காரணம் காட்டி வாழ்க்கைக்குவேண்டிய அத்தனை பொருத்தங்கள் இருப்பினும் திருமணங்களைக் கைவிடல், கிரக பலாபலன்களின் படி நடக்கக்கூடும் என நம்பப்படும் நிகழ்வுகளை பரிகாரங்கள்மூலம் மாற்றியமைக்கமுடியுமென நம்பி காரியமாற்றல் முதலான விடயங்களைக் கைவிடும் அளவிற்கு மூகம் விழிப்புணர்வு பெறவேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்டவகையில் யாவும் கிரகங்களின் சக்தியால் நடைபெறுகின்றன என நம்பும் அதே சமூகம், அனைத்தும் எண்களின் சக்தியால் நடைபெறுகின்றன என நம்புகின்றனர். எண் சோதிடம் மக்களை ஒன்பதாக பிரிக்கிறது. அதுவும் கணிதப்பெறுமதிகளை வேண்டுமென்றே வலுக்குறைப்புச் செய்து மனிதர்களை ஒன்பது வகைப்படுத்துகிறது.

ஒரு மாம்பழம் பத்து மாம்பழங்களுக்குச் சமனில்லை. ஆனால் 1ஆம் திகதி 10ஆம் திகதிக்குச் சமன். இது என்ன வேடிக்கை. இது கணித விஞ்ஞான அறிவுகொண்டு நோக்க வேண்டிய விடயம். எண், எழுத்து என்பன மனிதன் வாழ்க்கைக்குத் தேவைப்படுத்தப்பட்டு பயன்படுத்தப்படும் கருவிகள். நாம் பேசாமலோ எழுதாமலோ விட்டால் இவற்றிற்கு பெறுமதி கிடையாது. ஆனால் எண், எழுத்து இன்றி மனிதன் வாழமுடியாது. அதற்காக எண்கள் எழுத்துகள் மனிதனை ஆள்கின்றன எனக் கொள்ள இயலாது. கைத்தொலைபேசிகள், கணினிகள் என மானிட கண்டுபிடிப்புகள் மனிதவாழ்விற்கு அத்தியாவசியப்படுத்தப்பட்டுள்ளன. இவை இல்லாத உலகை நினைத்தே பார்க்கமுடியாது. அதற்காக கணினிகளும் கைபேசிகளும் மனிதனை ஆள்கின்றன என சொல்லமுடியுமா? எண்கள், எழுத்துகள் என்பன் மனிதனை நாவால் வடிக்கப்படும் ஒழுங்குபடுத்தப்பட்ட ஓசையும் பேனாவால் வடிவமைக்கப்படும் வடிவங்களும் மட்டுமே என்பதில் விழிப்புணர்வு பெறவேண்டும். ஒவ்வொரு மனிதனும் தனக்கு இயற்கையாகக் கிடைக்கப்பெற்ற ஆற்றலை நேரிய சீரிய வழிகளில் [illegible] வேண்டுமேயன்றி இத்தகைய [illegible] தூக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

## சுற்றுலாவுக்கான...

விவசாயச் சுற்றுலா, சூழல்சார் சுற்றுலா, கலாசாரம்சார் சுற்றுலா, சாகச சுற்றுலா, மதம்சார் சுற்றுலா, வணிகச் சுற்றுலா, கிராமப்புறச் சுற்றுலா, தொல்லியல் சார் சுற்றுலா, உணவு சார் சுற்றுலா, ஓய்வுக்கான சுற்றுலா, விளையாட்டு சார் சுற்றுலா, தேனிலவுச் சுற்றுலா என பல வகைகளாக வகைப்படுத்தப்பட்டு கையாளப்பட்டு வருகிறது. ஆனால் வடமாகாணத்தில் பெரும்பாலானவர்கள் கட்டடங்களையும், கடற்கரைகளையும் காட்டுவது தான் சுற்றுலா என்று நம்பிக்கொண்டிருக்கின்றனர்.

### குறுகிப்போயுள்ள சுற்றுலா வளர்ச்சி

யுத்தத்தின் பின்னரான வடபகுதிச் சுற்றுலா வளர்ச்சியானது உண்மையில் சில சுற்றுலா ஒழுங்கமைப்பாளர்கள் மற்றும் சில சுற்றுலா விடுதிகள் என்பவற்றின் மூலமே ஏற்பட்டுள்ளது என்றால் அதுமிகையில்லை. அந்த வகையிலேயே லோன்லி பிளனட் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்ததும், சுற்றுலாவுக்கு சிறந்த இடமாக யாழ்ப்பாணத்தைப் பரிந்துரைத்ததும் நடைபெற்றிருக்கிறது என்றே கருத வேண்டியுள்ளது. எவ்வாறெனினும் நல்லவிடயம் ஒன்றே நடந்தேறியுள்ளது. இவ்வாறான சூழ்நிலையில் இனியேனும் நாம் விழித்துக் கொள்ளவில்லை என்றால் கிடைத்துள்ள இந்த அரிய வாய்ப்பையும் நாம் தவறவிட வேண்டிய நிலை ஏற்படும்.

சுற்றுலாத்துறையில் அனுபவத்தையும் அறிவையும் கொண்டுள்ள விடுதிகள் மற்றும் சுற்றுலா ஒழுங்கமைப்பாளர்கள் என்று பார்த்தால் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான விடுதிகளும், சுற்றுலா ஒழுங்கமைப்பாளர்களுமே எம்மிடத்தில் உள்ளனர். அவர்களால் குறித்த அளவிலான சுற்றுலாவிகளையே கையாளமுடியும். அதையும் தாண்டி நேரடியாக வரக்கூடிய சுற்றுலாவிகளைப் பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும். இவர்கள் குறித்த இடங்களுக்கு வந்தே தமக்கான தங்குமிடம், சுற்றுலா வசதிகள் என்பவற்றை தேடிக்கொள்வார்கள். மேலும் வரக்கூடிய சுற்றுலாவிகளுக்கான வசதிகள் பொது இடங்களிலும் சுற்றுலாத் தளங்களிலும் உரியவகையில் ஏற்படுத்தப்படவேண்டும். குறிப்பாக மலசலகூட வசதிகள் சுகாதாரமானதாகவும் மற்றும் தூய்மையானதாகவும் ஏற்படுத்தப்படவேண்டும். தற்போது சுற்றுலாவிகள் பெருமளவில் வருகைதரும் சுற்றுலாத் தளங்களான யாழ்ப்பாணச் சந்தைப்பகுதி, யாழ்ப்பாண கோட்டைப்பகுதி, நல்லூர் கோவில் பகுதி என்பவற்றில் சுற்றுலாப் பயணிகள் பயன்படுத்தக்கூடிய வகையிலான மலசலகூடங்கள் இல்லை என்பதே யதார்த்தம். மலசலகூட வசதி என்பது அத்தியாவசியமானது. அதில் கூட நாம் இன்னும் அக்கறையுடன் செயற்படவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும்.

### பரந்துபட்ட வளர்ச்சிக்கு அடித்தளமாகும் சுற்றுலா

ஒரு பிரதேசம் சுற்றுலாத்தளமாக வளர்ச்சியடைகின்றபோது, தனியே அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த விடுதிகளும், உணவகங்களும் பயன்பெறுகின்றன என்று அர்த்தமில்லை. அந்தப் பிரதேசமே பொருளாதார ரீதியாக முன்னேறும். இதனை எமது மக்களும், அரச ஊழியர்களும் உணரவேண்டும். அவ்வாறு அனைவரும் உணர்கின்றபோது அந்தப் பிரதேசம் சுற்றுலாவிகளை வரவேற்கத் தயார் என்று கருதலாம்.

## யாழ். மாநகர...

கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். யாழ்ப்பாணம் மாநகரசபையின் மாதாந்த அமர்வு நேற்று நடைபெற்றது. இவ்வாறான நிலையிலேயே நேற்றுக் காலை முதல் யாழ்ப்பாணம் மாநகர சிற்றூழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இது தொடர்பில் அவர்கள் தெரிவித்ததாவது:- நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள மாநகரசபைகளில் பிராந்திய சுகாதார அதிகாரியின் கீழ்தான் சுகாதாரப் பிரிவுகள் உள்ளன. ஆனால், யாழ்ப்பாணம் மாநகரசபையில் மட்டும்தான் பொறியியலாளரின் கட்டுப்பாட்டில் உள்ளது. இது தவறு. இந்தத் தவறான நடைமுறையால், ஒவ்வொரு நாளும் பல்வேறு நடைமுறைப் பிரச்சினைகள் உருவாகின்றன. எனவே, எம்மையும் பிராந்திய சுகதார அதிகாரியின் கீழ் கொண்டுவரல் வேண்டும்.

அத்துடன் ஊழியர்களது நிரந்தர நியமனம், இடமாற்றம், உழவு இயந்திர ஒப்பந்தங்கள் மூலம் வகைதெரியப்படும் திண்மக்கழிவுகள் பிரித்தாள்கையில் இருக்கும் குழப்பங்கள் தொடர்பிலும் எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும் - என்றனர். (அ-ம-26)

## ஆதனப் பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 05, செல்லர் வீதியில் அமைந்துள்ள இலக்கம் 32 எனும் ஆதனம் எமது ஆதனப்பதிவேட்டில் கந்தையா பெண் இராசம்மா என பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் குகதாஸ் சோமசுந்தரம் பெண் சோமசுந்தரம் பவளரட்ணம் ஆகியோர் யாழ் நொத்தாரிசு செல்லத்துரை செல்வநாயகம் முகதாவில் 2005.09.18ம் திகதி 2163ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் அனோமா சோமசுந்தரத்திற்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் 1937.09.01ம் திகதி 4928ம் இலக்கத்தில் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதிப்படி தமது சொந்தமும் ஆட்சியுமான ஆதனமாகும் என்ற வகையில் தனது சொந்தமும் ஆட்சியும் என வெளிப்படுத்தியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாண பகுதி யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குட்பட்ட 5ம் வட்டாரத்தில் வரி இல 32 இணைக் கொண்ட செல்லர் வீதி J/109, இலக்க கிராம அலுவலர் பிரிவில் அமைந்த தனுஜன் வளவும் வானுதாரஜன் வளவும் நில.பர. 2 குளி குளி 08.37 இது 26.12.2000 ம் திகதி நில அளவையாளர் என் கேதீஸ்வரன் தயாரித்த 62ம் இலக்க நிலஅளவைப்படத்தில் துண்டு 1 என்றும் என்னால் சுட்டிய நிலபர.2 குளி 08.37 இதன் எல்லை;
கிழக்கு : வல்லிபுரம் பரமு ஆகியோரது ஆதனங்கள்.
வடக்கு : செல்லத்துரை சண்முகதாசினதும் பங்காளரதும் ஆதனங்கள்
மேற்கு : செல்லர்வீதி
தெற்கு : ஆதனமும் இதடங்கலும் மேற்படி 62ம் இலக்க நில அளவைப்படத்தால் துண்டு 2 என சுட்டப்பட்ட ஆதனமும் வீடும் கிணறும் இதடங்கலும்

தற்போது இவ்வாதனத்தை அனோமா சோமசுந்தரம் என்பவர் தனது பெயரை எமது ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சோமசுந்தரம் மகள் அனோமா என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முதல்வர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

## Chundikuli Girls' College Jaffna

### VACANCIES

Applications are invited from suitable candidates for the below vacancies.

1. Teacher of Information & Communication Technology
2. Teacher of Christian Civilization

Requirements

* Should possess a degree in the relevant field.
* Should be able to teach for A/L classes.

Apply before 19th of November 2025, with the names of two non-related referees.
Only short listed candidates will be called for an interview.

Principal,
Chundikuli Girls' College,
Jaffna.

**Postal Address** :- No. 6, Colombogam road,
Chundikuli,
Jaffna

**Email** :- forwardcgc@yahoo.com

## மரண அறிவித்தல்

தோற்றம்
29 . 11 . 1939



மறைவு
10 . 11 . 2025

### திருமதி கருணைபூசணி கனகசுந்தரம் (புஸ்பராணி)

நாரந்தனையை பிறப்பிடமாகவும் வேலணை மற்றும் மானிப்பாயை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கருணைபூசணி கனகசுந்தரம் (புஸ்பராணி) அவர்கள் நேற்று முன்தினம் 10.11.2025 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசுந்தரத்தின் (இராசையா) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லமுத்து தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சிவகுமார் மற்றும் சிவஜா (UK) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயந்தி, சிவானந்தன் (UK) ஆகியோரின் அன்பு மாமியாரும், விசாளன், சாஜினி, பவ்யா, மதுஷா வினுஜன் ஆகியோரின் அன்புப் பாட்டியும், மீனா, மாயா, தியா ஆகியோரின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, இராசரத்தினம், லோகேஸ்வரி, கோபாலபிள்ளை, தியாகராஜா மற்றும் இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், அன்னலட்சுமியின் ஆசை மச்சாளும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக நாவலடி ஒழுங்கை, மானிப்பாய் (சுதுமலைச்சந்தியருகில்) இல்லத்தில் வைக்கப்பட்டு இன்று (12.11.2025) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று மதியம் 12.00 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
சிவஜா சிவானந்தன்

## பதின்மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
25 . 05 . 1936



மறைவு
06 . 11 . 2012

### அமரர் சின்னத்தம்பி சண்முகநாதன்

(ஓய்வு நிலை அதிபர், அகில இலங்கை சமாதான நீதவான் (J.P))
திதி : அபரபக்க அட்டமி (12.11.2025)

மாறாத துயரினைத் தந்து மீளாத்துயில்
கொண்ட எம் அன்பு தந்தையே!
உருவாய் இல்லை என்றாலும் தெய்வமாக
எங்களுடன் என்றும் வாழ்ந்து கொண்டிருப்பீர்கள்.
இறைவன் திருவடி நிழலில் உங்கள் ஆத்மா
சாந்தியடைய வேண்டுகின்றோம்.
உங்கள் எண்ணங்களால் நிறைந்து
கனத்த இதயங்களுடன் வாழும்.

"சண்முகதீபம்"
இல. 43/4, கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

என்றும் மாறாத நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(CS/59363) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல் - 2026
## மன்னார் நகரசபை.

மன்னார் நகரசபைக்குச் சொந்தமான கீழ்காணும் அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையங்களை 22.10.2025ம் திகதிய MN/UC/2025/10/59 இலக்க சபைத்தீர்மானத்தின் நிபந்தனைகளிற்கமைய குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 12.11.2025 – 02.12..2025 செவ்வாய்க்கிழமை பி.ப 12.00 மணிவரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 02.12.2025 செவ்வாய்க்கிழமை பி.ப 14.30 மணிவரை
கேள்விகள் திறக்கப்படும் திகதி :- 02.12.2025 செவ்வாய்க்கிழமை பி.ப 14.30 மணி

**குத்தகை அட்டவணை 01 (குத்தகை காலம் 01.01.2026 – 31.12.2026)**

| இல | குத்தகையின் பெயர் | மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்பு | மீளளிக்கப்படாத பத்திரக் கட்டணம் | சபையின் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 1 | பட்டின மாட்டிறைச்சிக்கடை | 50,000.00 | 2,000.00 | 4,500,000.00 |
| 2 | பள்ளிமுனை மாட்டிறைச்சிக்கடை | 25,000.00 | 2,000.00 | 2,500,000.00 |
| 3 | பெரியகமம் மாட்டிறைச்சிக்கடை | 15,000.00 | 2,000.00 | 1,500,000.00 |
| 4 | பட்டின மீன்சந்தை | 15,000.00 | 2,000.00 | 1,343,000.00 |
| 5 | தனியார் வாகனத் தரிப்பிடக்கட்டண அறவீடு | 10,000.00 | 1,000.00 | 463,000.00 |
| 6 | பேருந்து நிலைய குளியலறையுடன் சேர்ந்தபொதுக்கழிப்பறை மற்றும் மீன் சந்தைக்கு அருகாமையில் அமைந்துள்ள குளியலறையுடன் சேர்ந்த பொதுக்கழிப்பறை | 10,000.00 | 1,000.00 | 887,000.00 |
| 7 | பட்டின சிறுவர் பூங்கா மற்றும் சிற்றுண்டிச்சாலை | 10,000.00 | 1,000.00 | 111,000.00 |
| 8 | பழைய நூலக கட்டடம் -1 | 10,000.00 | 1,000.00 | 726,000.00 |
| 9 | பழைய நூலக கட்டடம் -2 | 10,000.00 | 1,000.00 | 726,000.00 |

**அட்டவணை 02 (குத்தகை காலம் 01.01.2026 – 31.12.2027)**

| இல | குத்தகையின் பெயர் | மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்பு | மீளளிக்கப்படாத பத்திரக் கட்டணம் | சபையின் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 1 | பழைய நூலக கட்டடம் -3 | 20,000.00 | 2,000.00 | 2,000,000.00 |
| 2 | நகரசபை வளாகத்தில் அமையப்பெற்றுள்ள மீன் கடைக்கு மேல்தளத்தில் அமைந்துள்ள கட்டிடம் | 5,000.00 | 1,000.00 | 500,000.00 |

1. கேள்விப்பத்திரங்கள் இரண்டு பிரதிகளில் தனித்தனியான உறைகளில் இடப்பட்டு அரக்கு முத்திரை இடப்பட்டு **"தலைவர்/செயலாளர், மன்னார் நகரசபை"** என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் குறித்த தினத்திற்கு முன் எமக்கு கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அல்லது சபையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விப்படிவங்கள் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்விகோரும் சேவையின் விபரம் குறிப்பிடப்படல் வேண்டும்.
2. கேள்விப்பத்திரங்கள் மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும், மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணமும் செலுத்தி நகரசபையில் பெற்றுக்கொள்ளலாம். மேலும் மன்னார் மாவட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு மட்டுமே கேள்விப் படிவம் வழங்கப்படும். (இதனை கிராம அலுவலரின் சிபாரிசுடனும் பிரதேசசெயலாளரின் அத்தாட்சிப் பத்திரத்துடனும் சமர்ப்பித்தல் வேண்டும்). இந் நிபந்தனை **2025** இல் குத்தகை எடுத்து நடாத்தியவர்களுக்குப் பொருந்தாது. அத்துடன் **தேசிய அடையாள அட்டை நிழற் பிரதியும்** சமர்ப்பித்தல் வேண்டும்.
3. கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள்பெறுகைக் கோரலை கோருவதற்கும் பெறுகைக் குழுத் தலைவருக்கு அதிகாரம் உள்ளது.
4. கடந்த காலக் கேள்விகள் மூலம் சபைக்கு வருமதியான நிலுவைகளைச் செலுத்தத் தவறியவர்களும், கறுப்புப் பட்டியலில் உள்ளவர்களும் குத்தகைக் கேள்விகளில் பங்குபற்றத் தகுதியற்றவராவார்கள்.
5. 02.12.2025 ஆம் திகதி பிற்பகல் 14.30 மணிக்குப் பின்னர் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். மேலும் கேள்விகளை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் உரிமை கேள்விச் சபைக்குரியதாகும்.
6. குத்தகை அட்டவணை 01 இல் இலக்கம் 1,2,3 இல் குறிப்பிட்ட குத்தகை நிலையங்களில் வெளியிடங்களிலிருந்து சட்ட ஏற்பாடுகளுக்கமைய மாடு கொண்டு வருவது குத்தகையாளரது பொறுப்பே ஆகும். இதற்கு சபை எவ்விதத்திலும் பொறுப்பேற்காது.
   - 6.1 சித்திகரமான கேள்விகாரர் 2026 ஆம் ஆண்டிற்கு நகரசபை இறைச்சிக்கடைகளில் தனி மாட்டிறைச்சி 01 கிலோ ரூபா 2000.00 உம் எலும்புடன் இறைச்சி 01 கிலோ ரூபா 1800.00 இற்கும் இறைச்சி விற்பனை செய்யப்படல் வேண்டும். அறவிடப்படும் கட்டணங்கள் அனைத்திற்கும் பற்றுச்சீட்டு வழங்கப்படல் கட்டாயமானதாகும். மேலும் இறைச்சிக் கடைக்குரிய மின்கட்டணம், நீர்கட்டணம் குத்தகைதாரரினாலேயே செலுத்தப்பட வேண்டும். கொல்களத்தில் கட்டப்படும் மாடுகள் தொடர்பான பாதுகாப்பு குத்தகை தாரரினாலே பேணப்பட வேண்டும்.
   - 6.2 குத்தகை அட்டவணை 01 இல் இலக்கம் 1,2,3 இல் குறிப்பிட்ட குத்தகை நிலையங்களில் இறைச்சிக்காக விற்பனை செய்யப்படும் அனைத்து மாடுகளும் கொல்களத்திலேயே அறுவை செய்யப்படவேண்டும். அத்துடன் மாடு ஒன்றிற்கான அறுவைக் கட்டணமாக ரூபா 200.00 அன்றைய தினமே செலுத்துதல் வேண்டும்.
7. குத்தகை அட்டவணை 01, இலக்கம் 5 இல் குறிப்பிட்ட குத்தகை நிலையத்தில் வாகன தரிப்பிட அறவீடுகள் என்பது தனியார் வாடகை வாகனங்கள், முச்சக்கர வண்டிகள், இருசில்லு உழவு இயந்திரங்கள் மற்றும் நகரத்தின் உள்நுழையும் தனியார் வாகனங்கள் ஆகியவற்றிற்கான தரிப்பிடக்கட்டண அறவீடுகளுக்கானதாகும்.
   - 7.1 தனியார் வாடகை வாகனம் ஒன்றிற்கு ரூபா 50.00 உம், முச்சக்கர வண்டி ஒன்றிற்கு ரூபா 50.00 உம், இருசில்லு உழவு இயந்திரத்திற்கு ரூபா 50.00 உம், ஏனைய தனியார் வாகனங்களுக்கு ரூபா 100.00 உம் என்ற அடிப்படையிலேயே கட்டணங்கள் அறவிடப்படல் வேண்டும். அறவிடப்படும் கட்டணங்கள் அனைத்திற்கும் பற்றுச்சீட்டு வழங்கப்படல் கட்டாயமானதாகும்.
8. குத்தகை அட்டவணை 01 இலக்கம் 6 குறிப்பிட்ட குத்தகை நிலையங்களில் குளியலறையில் குளிப்பதற்கு பெரியவர்களுக்கு ரூபா 100.00 உம், சிறுவர்களுக்கு ரூபா 50.00 உம், மலகூடப் பாவனைக்கு ரூபா 20.00 உம் என்ற கட்டணங்களே அறவிடப்படல் வேண்டும். அறவிடப்படும் கட்டணங்கள் அனைத்திற்கும் பற்றுச்சீட்டு வழங்கப்படல் கட்டாயமானதாகும். அத்துடன் மீன்சந்தை பகுதியில் அமைந்துள்ள மலசலகூட கழிவுகளை மட்டும் நகரசபையினால் கட்ணமின்றி அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
9. குத்தகை அட்டவணை 01, இலக்கம் 7 இல் குறிப்பிட்ட குத்தகை நிலையத்தில் சிறுவர் பூங்கா நுழைவுக்கட்டணம் 12 வயதிற்குட்பட்டவர்களுக்கு ரூபா 20 உம், 12 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும் ரூபா 50.00 உம் என்ற அடிப்படையிலேயே கட்டணங்கள் அறவிடப்படல் வேண்டும். அறவிடப்படும் கட்டணங்கள் அனைத்திற்கும் பற்றுச்சீட்டு வழங்கப்படல் கட்டாயமானதாகும்.
10. குத்தகை அட்டவணை 01 இலக்கம் 7,8,9 மற்றும் குத்தகை அட்டவணை 02 இலக்கம் 01 குறிப்பிட்ட குத்தகை நிலையத்தில் அரசாங்கத்தால் தடைசெய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்தல் முற்றாகத்தடை செய்யப்பட்டுள்ளது.
11. கேள்வி அறிவித்தலில் சித்தியடைந்த கேள்விதாரர்கள் கேள்வியினை நிராகரிக்கும் சந்தர்ப்பத்தில் மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புத் தொகை மீள வழங்கப்படமாட்டாது.
12. சித்தியடையும் கேள்விதாரர் 1/3 பகுதி குத்தகை வைப்பினை 14 நாட்களிற்குள் செலுத்துவதோடு குத்தகைப் பணத்தினை மாதாந்தம் செலுத்துதல் வேண்டும். குத்தகை முடிவில் குறித்த சேவை நிலையத்திற்காக குத்தகையாளரினால் செலுத்தப்படவேண்டிய நிலுவை எதுவும் இல்லதாவிடத்து 1/3 வைப்புப் பணம் குத்தகை முடிவில் தங்களிற்கு மீளளிக்கப்படும்.

இக்கேள்விகள் சம்பந்தமாக மேலதிக விபரங்கள் தேவையாயின் மன்னார் நகரசபை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். அல்லது 023-2222285, 023-2222351 ஆகிய தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

**அ.பீ.டே.டா.பி.வசந்தன்.**
**தலைவர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு,**
**மன்னார் நகரசபை.**
**12.11.2025**

(CR 46271) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாமனிதர் ரவிராஜின் நினைவேந்தல் நிகழ்வு

மாமனிதர் நடராஜா ரவிராஜின் 19ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ்.கொக்குவிலில் அமைந்துள்ள தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தலைமையில் இடம் பெற்றது. நிகழ்வில் ரவிராஜின் உருவப் படத்துக்கு முன்பாக ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு, மலர்மாலை அணிவிக்கப்பட்டு, ஒரு நிமிட அகவணக்கத்தைத் தொடர்ந்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

குறித்த நிகழ்வில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப்பேச்சாளர் சட்டத்தரணி க.சுகாஷ், கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் பொன்மாஸ்ரர் மற்றும் கட்சியின் செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். (ச-66,40)

# முதலீட்டுப் பாதுகாப்பு புதிய சட்டம் அறிமுகம்

முதலீட்டுப் பாதுகாப்புக்கான புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

முதலீட்டுப் பாதுகாப்புத்தொழில்முயற்சிகள் மற்றும் சொத்துகள் உள்ளிட்ட தனிப்பட்ட சொத்துகளை தான்தோன்றித்தனமாகப் பொது உடைமையாக்குவதைத் தடுத்தல், பயனுள்ள மாற்றுவழிப் பிணக்குத் தீர்க்கும் பொறிமுறையாக முதலீட்டுப் பாதுகாப்புச் சபையைத் தாபித்தல் மற்றும் முதலீட்டாளர்களுக்கான கொள்கை உறுதிப்பாடு மற்றும் ஊகிக்கும் இயலுமையை உறுதிப்படுத்தல் போன்ற நோக்கங்களை அடைவதற்காக இந்தச் சட்டம் முன்மொழியப்பட்டது. அதற்கமைய, சட்டமூலத்தைத் தயாரிப்பதற்கான கருத்தாக்கப் பத்திரத்தைத் தயாரிப்பதற்காக அதிகாரிகள் குழுவொன்று நியமிக்கப்பட் டுள்ளது. குறித்த குழுவால் தயாரிக்கப்பட்டுள்ள கருத்தாக்கப் பத்திரத்தின் அடிப்படையில் சட்டமூலத்தைத் தயாரிக்குமாறு சட்டமா அதிபருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ச)

**மாபிள் வேலை**
உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி - 75 ரூபா
நிலம் இழுத்துப் பதிக்க - 100 ரூபா
077 334 1281

**காணி விற்பனைக்கு**
திருநெல்வேலி சந்தியிலிருந்து 300 மீற்றர் தூரத்தில் 01, 02, பரப்புகளையுடைய காணிகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
077 253 2575

## மாவீரர்நாள்...

தொடர்ந்தது. யாழ்ப்பாணம் மாநகர சபையின் கடந்த அமர்வின்போது, நினைவேந்தல்களை தனியே ஒரு தரப்பினர் நடத்த முடியாது என்றும், நினைவேந்தல்களுக்கு உரிமைகோர எவரையும் அனுமதிக்கப் போவதில்லை என்றும் யாழ்ப்பாணம் மாநகரசபையின் மேயர் மதிவதனி தெரிவித்திருந்தார். தமிழ்த் தேசியக் கட்சிகள் பேச்சுவார்த்தை நடத்தி நினைவேந்தல் தொடர்பில் தீர்க்கமான முடிவுக்கு வருமாறும் அவர் அறிவுறுத்தியிருந்தார்.
இந்த விடயம் தொடர்பில் மாநகர சபையின் நேற்றைய அமர்விலும் விவாதிக்கப்பட்டது. இதன்போது, நினைவேந்தலை நடத்துவதற்கு தமக்கே உரிமையுள்ளதாகவும், அதற்கான அனுமதியை தாமே பெற்றுள்ளதாகவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் தெரிவித்தனர். தமிழ் மக்கள் கூட்டணியினரும் நினைவேந்தலை நடத்த உரிமை கோரியதைத் தொடர்ந்து, சபையில் பெரும் குழப்பம் ஏற்பட்டது.
இதையடுத்து, கடந்த அமர்வில் இந்த விடயம் தொடர்பில் குறிப்பிட்டு, போதிய அவகாசம் வழங்கப்பட்ட போதிலும், இன்னமும் காத்திரமான தீர்வொன்று இரு தரப்பாலும் எட்டப்படவில்லை. எனவே, இனிவரும் காலத்தில் அனைத்துக் கட்சிகளையும் இணைத்தே நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெறும் என்று யாழ். மாநகர முதல்வர் மதிவதனி அறிவித்தார். அனைவரும் இணைந்து நினைவேந்தலை நடத்துவது என்ற முடிவை தேசிய மக்கள் சக்தியும் ஆதரித்தது. (அ-ம-26)

## ஏழைகள்...

அநுர முன்வைத்த பட்ஜெட் அமைந்துள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
பட்ஜெட் தொடர்பில் நாடாளுமன்றில் நேற்று நாமல் மேலும் தெரிவித்ததாவது:-
தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள பட்ஜெட் ஏழைகளுக்கு வஞ்சகம் செய்யும் வகையிலேயே அமைந்துள்ளது. ஏழைகளின் வயிற்றில் அடித்து, செல்வந்தர்களுக்கு நிவாரணம் வழங்கும் நடைமுறை பட்ஜெட்டில் பின்பற்றப்பட்டுள்ளது. இந்த பிற்போக்கான செயற்பாட்டை அரசாங்கம் கைவிட வேண்டும்.
2026ஆம் ஆண்டுக்குரிய பட்ஜெட்டை சர்வதேச நாணய நிதியம் தயாரித்ததா அல்லது ஜனாதிபதி தயாரித்தாரா என்று கணிக்க முடியாத வகையிலேயே பட்ஜெட் அமைந்துள்ளது - என்றார். (அ-ம-44)

## மாவீரர்...

பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் நேற்றைய அமர்வின் பின்னர் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது:-
பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் இன்றைய அமர்வில் சில முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. இதன்படி, மாவீரர் நாளை புனித நாளாக அறிவிப்பதற்கு சபை ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது. அத்துடன், அன்றைய தினத்தில் சபை எல்லைக்குள் உள்ள அனைத்து மதுவிற்பனை நிலையங்களையும் பூட்டுவதற்கும் தீர்மானித்துள்ளோம். இந்த விடயத்துக்கு சபை உறுப்பினர்கள் அனைவரும் தமது ஆதரவைத் தெரிவித்தமை வரவேற்கத்தக்க விடயம்.
அத்துடன், 2026ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் இன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. 13 உறுப்பினர்களும் பட்ஜெட்டுக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். எதிர்ப்புகள் எதுவும் இல்லாமல்தான் பட்ஜெட் நிறைவேற்றப்பட்டுள்ளது. பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் அபிவிருத்திப் பணிகளை சீராக மேற்கொள்வதே எங்களின் பிரதான நோக்கமாகும் - என்றார். (அ-ம-27)

## ரயில்...

உயிரிழந்துள்ளார். கிளிநொச்சி சந்தைப் பகுதிக்கு அருகாகவே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.
இரணைமடுச் சந்தி பாரதிபுரத்தைச் சேர்ந்த, செபஸ்ரியன் சிவகுருநாதன் (வயது -64) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். (அ-ம-113)

## நான்...

துள்ளார். கொழும்பில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் சரத் பொன்சேகா மேலும் தெரிவித்ததாவது:-
என்னைச் சர்வாதிகாரி என்றும், நான் தலைவரானால் சர்வாதிகாரப் போக்கே நிலவும் என்றும் பலர் கூறுகின்றனர். உண்மையில் நான் ஒரு ஜனநாயகவாதி. நான் சர்வாதிகாரியென்றால், இறுதிப்போரின் பின்னர் என்னால் மிக இலகுவாக ஆட்சியைக் கைப்பற்றியிருக்க முடியும். ஆனால், நான் அவ்வாறு செயற்பட விரும்பவில்லை. ஏனெனில், நான் எப்போதும் ஜனநாயகத்தின் பிரகாரமே செயற்பட்டு வருகின்றேன்.
இராணுவத்தில்கூட சர்வாதிகார உத்தரவுகளை நான் பிறப்பித்ததில்லை. ஆனால், நாடு முன்னேற வேண்டுமெனில் நாட்டை நேசிக்கக்கூடிய சர்வாதிகாரியொருவர் அவசியம் - என்றார். (அ-ம-44)

## சிற்றூழியர்களின்...

அவர்களைச் சந்திப்பதற்கு யாழ்.மாநகர மேயர் மதிவதனி மறுத்துள்ளார்.
இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:-
யாழ்ப்பாணம் மாநகர சிற்றூழியர்கள் மேற்கொள்ளும் போராட்டம் முறையற்றது. முன்னறிவிப்போ, தெரியப்படுத்தலோ இன்றியே இந்தப் போராட்டம் இடம்பெறுகின்றது. எனவே, முறையற்ற முறையில் வீதியில் நிற்பவர்களைச் சந்திப்பதற்கு நான் தயாரில்லை. அத்துடன், இந்தப் போராட்டம் பல்வேறு பின்னணிகளால் இடம்பெறுகின்றது.
எனினும், எழுத்துமூலமான ஆவணத்துடன் நேரடியாக வந்து சந்தித்தால், அவர்களின் கோரிக்கைகளைச் செவிமெடுக்கவும் பரிசீலிக்கவும் தயாராக உள்ளேன் - என்றார். (அ-ம-26)

## தாதிய...

தாதியர் உத்தியோகத்தர் சங்கம் தீர்மானித்துள்ளது.
வடக்கு மாகாணசபையின் ஆளுகைக்கு உட்பட்ட மருத்துவமனைகளில், பணிபுரியும் தாதிய உத்தியோகத்தர்களுக்கான வருகை மற்றும் புறப்படல் பதிவுக்காக ஏனைய ஊழியர்களுடன் சேர்த்து ஒரே கையொப்பப் பதிவுப் புத்தகம் பயன்படுத்தல் என்ற முடிவுக்கு எதிராகவே இந்தப் போராட்டம் நடைபெறவுள்ளது.
இது தொடர்பில் அரச தாதியர் உத்தியோகத்தர் சங்கம் வெளியிட்ட அறிக்கையில் உள்ளதாவது:-
வடக்கு மாகாணத்தைத் தவிர ஏனைய மாகாணசபைகளிலோ அல்லது மத்திய அரசாங்கத்தின் மருத்துவமனைகளிலோ இத்தகைய நடைமுறை அமுலில் இல்லாததால், வடக்கு மாகாணத்தில் மாத்திரம் இது தன்னிச்சையாக அமுல்படுத்தப்படுவது பாரதூரமான பிரச்சினையாகும். அனைத்து ஊழியர்களும் ஒரே வருகைப் பதிவேட்டில் கையொப்பமிடுவதால், பல்வேறு கடமை நிலைகளை இலகுவாக அடையாளம் காண்பது பெரும் பிரச்சினையாக அமையும். இதனால், சேவைத் தேவையின் பேரில் செய்யப்படும் மேலதிக கடமைகளுக்கான உரிய கொடுப்பனவுகளைக்கூட இழக்கும் அபாயம் உருவாகலாம்.
அரசாங்கத்தின் வேலைத்திட்டமாக, எதிர்காலத்தில் உயிரியல் அளவீட்டு முறைகள் அமுல்படுத்தப்படும்போது, அதற்கேற்ப தற்போதுள்ள நிலைமைகளைக் கருத்தில் கொள்ளலாம். அதுவரை இடைக்கால நடவடிக்கைகள், வெறுமனே கணக்காய்வு அதிகாரிகளுக்கே வசதியாக அமையும், ஆனால் ஏனைய அதிகாரிகளுக்குப் பிரச்சினையை ஏற்படுத்தும் இந்த யோசனையை அமுல்படுத்துவதை நிறுத்தி வைக்க நடவடிக்கை எடுக்குமாறு கோருகின்றோம் - என்றுள்ளது. (அ-ம-26)

## தொல்பொருள்சார்...

தொல்பொருள் ஆலோசனைக் குழுவில் நான்கு சிறுபான்மை இனத்தவர்களை உள்வாங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்று நம்பத்தகுந்த வட்டாரங்கள் மூலம் அறிய முடிகின்றது.
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நேற்றுமுன்தினம் அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றுள்ளது. இதன்போதே, தொல்பொருள் ஆலோசனைக் குழு தொடர்பில் விரிவாக ஆலோசிக்கப்பட்டது என்றும், அதில் சிறுபான்மை மக்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அறிய முடிகின்றது.
ஒக்ரோபர் மாதம் 24ஆம் திகதியன்று புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவியால் தொல்பொருள்சார் ஆலோசனைக்குழு நியமிக்கப்பட்டது. இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நவம்பர் மாதம் முதலாம் திகதி வெளியிடப்பட்டது. இதனூடாக குறித்த ஆலோசனைக் குழுவில் சிறுபான்மை இனத்தவர்கள் எவரும் உள்ளடக்கப்படவில்லை என்ற விடயம் தெரியவந்ததுடன், அரசாங்கத்துக்கு எதிராகக் கடும் விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டிருந்தன. இதைத் தொடர்ந்தே, தற்போது சிறுபான்மை இனத்தவர்களையும் உள்வாங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## கொடும்...

ளார். பிரதீப் நிவேதா (வயது-24) என்ற யுவதியே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-
பெற்றோர் இருவரும் இல்லாத நிலையில், தனது சகோதரியுடன் அந்த யுவதி வசித்து வந்துள்ளார். வீட்டாருக்குக் கூறாமல் அவர் வெளியில் சென்று வந்ததால், கடந்த எட்டாம் திகதி அவரது தாய்மாமன் குறித்த யுவதியை கடுமையாகத் தாக்கியுள்ளார். இதையடுத்து, கடந்த 9ஆம் திகதி அதிகாலை திடீர் சுகவீனம் அடைந்த யுவதி, அதிகாலை 4 மணியளவில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் அந்த யுவதி முன்னரே உயிரிழந்துவிட்டார் என்று தெரிவித்துள்ளனர்.
உடற்கூற்றுப் பரிசோதனையில் உடலில் கண்டல் காயங்கள் இருப்பது தெரியவந்துள்ளது.
தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில், கோப்பாய் பொலிஸாரால் தாய்மாமன் கைது செய்யப்பட்ட நிலையில், அவர் எதிர்வரும் 22ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ-ம-26)

## தவறான...

தவறான முடிவெடுத்து நேற்று உயிரிழந்துள்ளார்.
சம்பவ இடத்துக்குச் சென்ற பருத்தித்துறை திடீர் மரண விசாரணை அதிகாரி திருமதி அன்ரலா வின்சன்தயான் விசாரணை மேற்கொண்டார்.
சாட்சிகளை வல்வெட்டித்துறைப் பொலிஸார் நெறிப்படுத்தினார்கள். (அ-ம-100)

## ரூ.170...

ரூபா செலவில் யாழ்ப்பாணத்தில் உள்ளக விளையாட்டு அரங்கொன்றை அமைப்பதற்கு விளையாட்டுத் துறை அமைச்சரால் திட்டமொன்று முன்வைக்கப்பட்டது. அந்தத் திட்டத்துக்கே அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (அ-ம)

## முன்னைய...

மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் சட்டம் இயற்றிக் கொடுப்பதற்கு நாடாளுமன்றம் தயாராகவே உள்ளது. பழைய முறைமையின் கீழ் தேர்தலை நடத்தலாம். ஆனால் கூட்டுறவுத் தேர்தல்களில் தோல்வி ஏற்படுவதால், மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் அஞ்சுகின்றது என்பதே உண்மை - என்றார்.
மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே, தேர்தல் முறைமை தொடர்பில் தீர்மானம் எடுக்க வேண்டிய நாடாளுமன்றத்தின் பொறுப்பு என ஜனாதிபதி அநுர தனது பட்ஜெட் உரையில் வலியுறுத்தி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## ஒரு...

முன்னெடுத்து வருகின்றது. கரைச்சி பிரதேசசபையின் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் பாதீனியத்தை ஒழிக்கும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. இதன் முக்கியமான செயற்திட்டமாகவே, பொதுமக்களிடம் இருந்து ஒரு கிலோ பாதீனியம் 200 ரூபாவுக்குக் கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றது. வேருடன் பிடுங்கி ஒப்படைக்கப்படும் பாதீனியத்துக்கே இந்தத் தொகை வழங்கப்பட்டு வருகின்றது. (அ-ம-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பு அமைச்சுக்கு அதிக நிதி நாட்டின் மீட்சிக்கு வழிவகுக்காது!

## சத்தியலிங்கம் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, நவ.12

யுத்தம் முடிவடைந்து 16 வருடங்கள் முடிவடைந்துள்ள நிலையிலும் பாதுகாப்பு அமைச்சுக்கு வரவு - செலவுத் திட்டத்தில் 10.26 வீத நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப் பெருந்தொகையான நிதியை ஒதுக்கீ செய்வது நாட்டின் சமாதானத்தையோ, பொருளாதார அபிவிருத்தியையோ உறுதிப்படுத்த எந்தவகையிலும் பங்களிக்காது என இலங்கைத் தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 2026ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை சுதந்திரமடைந்தபோது இலங்கையின் பொருளாதாரக் குறிகாட்டியானது ஆசிய நாடுகளில் பல்வேறு நாடுகளைவிடவும் மிகவும் சிறப்பாக இருந்தது. ஜப்பானுக்கு அடுத்த நிலையில் இருந்ததாகவும் கூறப்படுகின்றது. ஆனால் இலங்கை பின்பற்றிய தவறான அரசியல் பொருளாதார, கல்வி மற்றும் சமூகக் கொள்கைகளினால் பொருளாதாரத்திலும் சமூக விழுமியங்களிலும் பின்தள்ளப்பட்டு இனக் குழுக்களுக்கு இடையே முறுகல்கள் ஏற்படுத்தப்பட்டு இறுதியில் நாடு வங்குரோத்து நிலையடைந்தது.

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் முக்கியமான அமைச்சுகள் சில தவறவிடப்பட்டுள்ளன. கல்வி அமைச்சு, விவசாயம், காணி, நீர்ப்பாசன உள்ளிட்ட அமைச்சுகளுக்கு பெரிய தொகைகள் ஒதுக்கப்படவில்லை. ஆனால் போர் முடிவடைந்து 16 வருடங்கள் கடந்தும் பாதுகாப்பு அமைச்சுக்கு மிகவும் பெரிய தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. அதாவது 455 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இது மொத்த வரவு - செலவுத் திட்டத்தில் 10.26 வீதமாகும். இந்த ஒதுக்கீடு இந்த நாட்டின் சமாதானத்தையோ, நாட்டின் பொருளாதார அபிவிருத்தியையோ ஏற்படுத்த எந்தவகையிலும் பங்களிக்கப் போவதில்லை - என்றார். (ச-இ)

காணி விற்பனைக்கு
மீசாலையில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு
077 794 8012

விற்பனைக்கு
யாழ். ஆஸ்பத்திரி வீதியில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக 6 பரப்புக் காணியும், யாழ். மானிப்பாய் வீதியில் ஈழநாடு பத்திரிகை காரியாலயத்திற்கு முன்பாக 6 பரப்புக் காணியும், யாழ். பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் பலாலி வீதியில் வீதி முகப்புடன் 6 பரப்புக் காணியும், யாழ். பலாலி வீதியில் அம்மாச்சி கடைக்கு அண்மையில் பலாலி வீதி முகப்புடன் 6 பரப்புக் காணியும், யாழ். பலாலியில் 100 பரப்புக் காணியும், 60 பரப்புக் காணியும் உடன் விற்பனைக்கு உண்டு.
விபரங்களுக்கு: 0777 23 25 35
(CS 30365) A



## பார்வையைப் பறிக்கும் 'கெரடோகோனஸ்'

### மருத்துவர்கள் எச்சரிக்கை

கொழும்பு, நவ.12

பார்வையைச் சிதைக்கும் கண் நோயான கெரடோகோனஸ் எனும் நோய் பாடசாலை மாணவர் உட்பட இலங்கையர்களிடையே அதிகரித்துவருவதாக தேசிய கண் மருத்துவமனை எச்சரித்துள்ளது.

ஒரு காலத்தில் அரிதாகக் கருதப்பட்ட இந்த நோய் இப்போது எட்டு வயதுக்குட்பட்டவர்கள் மத்தியில்கூட அதிகரித்துவருகிறது.

கெரடோகோனஸ் கண்ணின் தெளிவான முன் மேற்பரப்பான கார்னியாவைப் படிப்படியாக வீக்கமடையச் செய்கிறது. இதன் விளைவாக மங்கலான அல்லது சிதைந்த பார்வை ஏற்படுகிறது. நோயின் நிலை மற்றும் தீவிரத்தைப் பொறுத்து சிகிச்சை விருப்பங்கள் மாறுபடும். இந்த நோயைக் கட்டுப்படுத்த ஆரம்பகாலப் பரிசோதனை மற்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு அவசியம். சரியான நேரத்தில் கண்டறியப்பட்டு நிர்வகிக்கப்படாவிட்டால் கடுமையான பார்வைக் குறைபாட்டுக்கு வழிவகுக்கும் என மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர். (ச-இ)

மரண அறிவித்தல்



பிறப்பு 01.02.1965
இறப்பு 10.11.2025

திரு. திருஞானம் ஜோண் குயின்ரஸ்
(ஓய்வுநிலை கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம், முன்னாள் மாகாணக் கல்விப் பணிப்பாளர் - வடமாகாணம்)

யாழ்ப்பாணம் சுண்டிக்குளியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திரு.திருஞானம் ஜோண் குயின்ரஸ் அவர்கள் கடந்த 10.11.2025 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் திருஞானம் - மேரி கெலன் ஜெயசீலி தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான பீட்டர் தேவராஜ் - சரோஜினி மார்கிரட் தம்பதியரின் மருமகனும், விவி விஜித்தா அவர்களின் அன்புக் கணவரும், தனுசன் (இலங்கை மின்சார சபை - யாழ்ப்பாணம்), கீர்த்திகா (யாழ். மருத்துவ பீட 43வது அணியின் இறுதியாண்டு மாணவி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சஜானா (வீதி அபிவிருத்தி திணைக்களம் - யாழ்ப்பாணம்) அவர்களின் மாமனாரும், த.ஆதித்யன் அவர்களின் பேரனும், கிளின்ரஸ், ஜோண்சன் கரின்ரஸ், நிக்சன் டைட்டஸ், லீன்ரஸ் ஆகியோரின் மூத்த சகோதரனும், ராஜன் (அவுஸ்திரேலியா), ராயூ, ரகு (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனைத் திருப்பலி இன்று (12.11.2025) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.28, சோமசுந்தரம் அவினியு,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
077 310 4910
077 047 6963

தகவல் :
குடும்பத்தினர்.
(CS 30365) A

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.11. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org